# பாலர் கல்வி


| | | |
|---|---|---|
| தொகுதி 5 | 1940 ஞூ ஜூன் மீ<br>விக்கிரம ஞூ ஆனி மீ | பகுதி 3 |


## பிள்ளையின் மனம்

[390-ம் பக்கத் தொடர்ச்சி.]

(M. Subramaniam, *Assistant, E.L.M., Fabricius High School, Madras.*)

### XIX *சிந்தாஞசக்தி* (Thinking)

### சொற்களும், பொது எண்ணங்களும் (Words and Concepts).

இளமனமும்-அறிவின் தன்மையும்

*ஒரு குழந்தை, தான் கண்டதை எவ்வாறு வருணித்துக் கூறுகிறது. ஓர் ஆசிரியருடைய கேள்வியோ, விண்ணப்பமோ குழந்தையின் மனத்தைத் தூண்டி, குறிப்பிட்ட முழுப்பொருளும் விரிவாகத் தோன்றும் படிச் செய்கின்றது. அது, தன்னுடைய முழு அனுபவத்தையும் ஒரு வாறு சொற்களின் மூலமாக வெளியாக்குவதற்குமுன், தன் மனத்தில் அமைந்திருக்கும் ஒரு பொருளைப்பற்றிய எண்ணத்தொகுதியில்* (Aggreate Idea) *ஒரு பாகமே முன்வந்து தோன்றுகின்றது. பின்பு, பற்பலபாகமாக பிரிந்து வேறு பாகங்களும் தோன்றுகின்றன.* ஒவ்வொரு எண்ணமும் அதற்கு எற்ற ஒவ்வொரு பொருளுருவத்தின் ஞாபகத்தால் கிளரப்பட்டு சொற்களின் மூலமாகவே ஒருவாறு தோன்றுகிறது. இவ்வெண்ணங்களேல்லாம் முதன்முதல் புலனுணர்ச்சி வாயிலாகவே அமைந்திருப்பதாலும், பிறகு உற்று நோக்குதல், ஞாபகசக்தி, கற்பனைத் திறன் முதலியவற்றால் மானச உருவங்களாக அமைந்திருப்பதாலும், பொருட்களைப்பற்றிய பொதுக்கருத்தும் அர்த்தமும் இங்கிலையில் அதிகமாக இல்லை. *கடந்த சம்பவங்களைப்பற்றியும் நேர்ந்த அனுபவங்களையும், படித்த பாடங்களையும் சிறுவர்கள் ஒருவித* "உருவமாகவே" *தங்கள் மனத்தில் முழுமையாக அமைத்துக்கொண்டு, பின்பு அவைகளைப் பாகங்களாகப் பிரித்துக் கூறுகின்றார்கள். மேலும், சிறுவர்கள்* **தனித்தனி பொருட்களிடத்தில் அதிகவிருப்பங்கொண்டவர்களாயும், அதைப்பற்றிய சகல விசேஷங்களையும் உணர்கின்றவர்களாயும், அதை வேண்டும்போது**

தங்கள் மனக்கண்ணின்முன், கற்பனை உருவங்களாகக் கொண்டுவந்து சந்தோஷப்படுகிறவர்களாயும் இருக்கின்றார்கள். சிறுவர்களும் சிறுமிகளும் பதினாறு பிராயம் வரையில் தெளிவும் விரிவும் நிறைந்த பலவிதமான மானச உருவங்களையே எண்ணங்களுக்குப் பதிலாக உபயோகப்படுத்துகிறார்கள் என்று டாக்டர் ரஸ்க் (**Dr. Rusk**) என்பவரும் கூறியுள்ளார். "ஆரம்பக்கல்வி மாணவர்களில் ஒரு பெருந்தொகுதியாளர் தங்கள் மனக்கண்முன்னே பொருட்களின் உருவத்தைத் திரும்பக்கொண்டு வருகிறவர்களாக இருக்கின்றார்களே தவிர, அவற்றின் பொது எண்ணங்களை அறிகிறவர்களாக இல்லை. ஆசிரியர்கள் இம்மாண்புடைய மாணவர்களின் மனத்தினுட்புகுந்து உற்றுப்பார்த்தால் அங்குச் "சினிமா காக்ஷி பிலிம்" எவ்வாறு இருக்கின்றதோ, அவ்வாறு காண்பார்களே தவிர, சூக்ஷும எண்ணங்களையேனும் (**Abstract Idea**) பொது எண்ணங்களையேனும் காணார்" என்று பர்ட் (**Burt**) என்போரும் அபிப்பிராயப்படுகின்றார். எனவே இளமனத்தில் சிந்தனைக்குறிய போதுக் கருத்துக்களும், எண்ணங்களும் சொற்களின் விரிவான அர்த்தமும் இன்னும் அமையவில்லை என்பது தெரிகின்றது.

### மானச உருவங்களின் அர்த்தமும் வரம்பும்

வெறும்புலன் உணர்ச்சி பாகம் அதிமாகச் சம்பந்தப்பட்டு கற்பனை சக்திக்கு உதவியாக இருக்கும் புலனுணர்ச்சி பாகமும், (**Sensational part**) சிந்தனை சத்திக்கு அதிக உபயோகமாயிருக்கும் கருத்தும் பொருளும் நிறைந்த பாகமும் (**Idiational Part**) சிறுவர்களுடைய மனத்தில் அமைந்திருக்கும் "உருவங்களில்" அடங்கி இருக்கின்றன என்று மனோ தத்துவ பிரகாரம் கூறுவதுண்டு. இவ்விருபாகத்தில் குழந்தைப் பருவத்திற்கு உரியது கற்பனை பொருட்கள் நிறைந்த பாகம், புதுப் புதுக் கருத்துக்களும் எண்ணங்களும் தோன்றும்படி ஒன்றைச் சிந்திப்பது, சற்று வளர்ந்த பிராயத்திற்குரியது. ஆனால் இவ்விரண்டையும் இரு பிரிவாகக் கருதுவோர்கள் பிழைக்கு உள்ளாவார்கள். ஏனென்றால் இது மனோதத்துவ சாஸ்திர சௌகரியத்தின் பொருட்டு இவ்விதம் வகுக்கப் பட்டது. குழந்தையானது எப்போதும் குழந்தை பருவததிலேயே இல்லை. அது எப்போதும் ஒவ்வொரு பொருளையும் விரிவாகவும், தெளிவாகவும் தன்மனக்கண் முன்பாகக்கொண்டு வந்து நினைக்க முடியாது. மானச உருவங்களுக்கும் ஓர் வரம்புகாலம் உண்டு. சிந்தனைக் குரியகாலம் வந்து விட்டால் மானச உருவங்களே பொருட்களைப் பற்றிய பொதுக் கருத்துக்களாக மாறிவிடும், மேலும் மானச உருவங்களை நாம் எப்போதும் நம்பி இருக்கமுடியாது. ஏனென்றால் இவ்வுருவங்கள் ஒவ்வொருவனுடைய மனோவிகார உணர்ச்சி (**Emotion**) அனுபவம், தனிவிருப்பம் [**Special Interest**] முதலிய வற்றால் வர்ணக் கண்ணாடி மூலமாகப் பார்க்கும் பொருட்கள்போல் நோக்கப்படுகின்றன.

நமக்குப் பிடிக்காத பொருள்கள்போல் அழகாக இருப்பினும் அருவருப் பாகவே தோன்றும். இதனால் வெளியுலகப்பொருளின் உண்மையான தன்மையும் மாறிவிடும். அல்லாமலும், பொதுகருத்து வளர வளர இவ் வுருவங்கள் நீடித்து இருக்கா. ஒழுக்கும், வாய்மை, முதலிய குணத்தைக் குறித்துக்காட்ட இவ்வுருவங்கள் உபயோகப்படுகிறதில்லை. எனவே சிறுவர்களுடைய ஞாபகசக்திக்கும் கற்பனைசக்திக்கும், அவசியமாகவும் அடிப்படையாகவும் இருந்து பேருதவி புரிந்த இம்மானச உருவங்கள், வர வர மங்கி, சிந்தனைசக்திக்குரிய போது எண்ணங்களாகவும் போதுக்கருத் துக்களாகவும் (General Idea) மாறிவி-கின்றன. இனிக்கருத்துக்களை யும், பொது எண்ணங்களையும், கொண்ட சொற்களின் உபயோகமும் அவற்றின் தன்மையும் எப்படி இருக்கின்றன என்பதைப் பார்ப்போம்.

சொற்களும்-எண்ணங்களும்

குழந்தை, தன்னைச்சுற்றியுள்ள பொருட்களை முதன் முதல் "உற்றுநோக்குகிறது". இப்படிப்பார்த்துக் கொண்டிருக்கும்போது அப் பொருட்களைப்பற்றிப் பிறரால் சொல்லக்கேட்கிறது. பின்பு அப்பொரு ளுக்குரிய சொற்களைக் கேட்டபடி தானும் உபயோகிக்கப் பிரயாசைப் படுகிறது. இப்படிப் பற்பல சந்தர்ப்பங்களில் இவ்விதமான சொற்களை உபயோகித்துப் பார்த்து அவற்றின் திட்டமான அர்த்தத்தையும் உணர்ந்து கொள்கின்றது. உதாரணமாக ஒரு குழந்தையை ஒரு மிருக காக்ஷிசாலைக்கு அழைத்துச்செல்லும் தந்தை, அங்கிருக்கும் பற்பல பிராணிகளைக் காட்டுவதோடு, அவற்றின் பெயரையும் கூறுகின்றார். இப்பொருளின் பெயர் சொல்லுருவத்திலே அடங்கி இருக்கின்றது. இச் சொற்கள் ஒலிவடிவமாக செவிப்புலத்தில் தாக்கி நரம்பு உணர்ச்சியை எழுப்பி மனத்தில் அமைகின்றன. கண்ணால் கண்டது ஒரு பொருள். காதால் கேட்டது அப்பொருளுடைய பெயர், மனத்தில் தங்கியது சொல்லில் அடங்கிய குறிப்பான கருத்து. இச்சொல்லானது அர்த்தமுள் ளது. குழந்தை, திரும்பவும் அச்சொல்லைக் கேட்டவுடன் அப்பிராணி யின் உருவமும், அப்பிராணியைப்பார்த்தவுடன், அதற்குறிய சொல்லும், ஞாபகத்திற்கு வருகின்றன. இப்படி ஓர் இனப்பொருளைப் பலதரம் உற்று நோக்கிக் கொண்டே வந்தால், அவற்றின் பொதுக்கருத்தும் ஏற் படுகின்றது " இச்சொற்களோ பொருட்களைப்பற்றிய பொது எண்ணங்களை எழுப்புகின்றன. நிற்க, முதன் முதல் தான் கண்ட ஒன்றைத் தன் தந்தையின் மூலமாகவோ பிறராலோ சொல்லக்கேட்ட குழந்தை, அப் பொருளை கா்ணுத நிலையிலும் அதை இரண்டாந்தரம் வேறு சந்தர்ப்பத்தில் நினைக்கக்கூடும். இப்படி இரண்டாந்தரம் விரைவாகவும் எளிதிலும், நினைப்பதற்குச் சாதகமாயுள்ளது பொருளடங்கிய சொற்களேயாகும். பொருள் பிரத்தியக்ஷமாக இல்லாவிடினும், அப்பொருளை யுணர்த்தும் சொற்களைக்கொண்டு பலவிதங்களாலும், அதைப்பற்றி நினைத்துப்பார்ப்

பதே சிந்தனை சக்திக்கு முதற்படி. மேலும் ஒரு சிறுவன் பொருளின் பெயரைத் தெரிந்துகொண்டு அதை மனத்தில் இறுத்திக்கொள்கின்றான். பின்பு திருப்பிச்சொல்லும்போது சொல்லுருவாகத்தான் வெளி இடுகின்றான். இக்காரணத்தை முன்னிட்டே குழந்தைகள் மூதன் முதல் பொருட்களைப் பற்றிய பெயரைத் தெரிந்துகொள்ள ஆவலுள்ளவர்களாய் "இது என்ன" "அது என்ன" என்றுகேட்கிறார்கள். இவ்வண்ணம் ஒவ்வொரு பொருளையும் கேட்டே அதன் பெயரைத் தெரிந்துகொள்கின்றார்கள். தொழில், காலம், இடம், பண்பு, முதலியவற்றை உணர்த்தும் பெயர்களையும், படிப்படியாய் தெரிந்து கொள்கின்றார்கள். ஆனால் முதலில் அவற்றின் அர்த்தம் அதிகமாக விளங்குகின்றதில்லை.

### சொற்களும் மானச உருவங்களும்

இப்படிப் பலவிதங்களில் உபயோகப்படும் சொற்களுக்கும், மானச உருவங்களுக்கும் அநேக வித்தியாசங்கள் இருக்கின்றன. ஒரு குறித்த அனுபவத்தின் பயனால் தான் மானச உருவங்கள் வெகு தெளிவாக இருக்கின்றன. இத்தன்மையான அனுபவம், பற்பல நுட்பமான விஷயங்களையும் சில சமயம் குறித்துக் காட்டும். ஆனால் சொற்களோ யாதொரு குறித்த அனுபவத்தையும் காட்டாமல், வெறும் "பெயர்களைமாத்திரம்" உணர்த்தும். உதாரணமாக நாம் சிறுவர்களுக்கு "யானை" என்று சொல்லி அது ஒரு மிருகத்தின் பெயரென்றும் கூறிவிட்டால், அப்பிராணியைப் பாராதவன் மனத்தில் அச்சொல் யாதொரு திட்டமான எண்ணத்தையும், மானச உருவத்தையும் காட்டாது. அது வெறும் ஒரு பிராணியின் பெயரென்றே கருதி விடுவான், ஆனால் அப்பிராணியைப் பார்த்தவன் ஒருவன் அப்பெயரைக் கேட்டமாத்திரத்தில் அப்பிராணிக்குரிய நிறம், நீண்ட தந்தம், சிறுகண், பெருஞ் செவி, நீண்ட துதிக்கை, பருத்த கால், முதலியனவும், வெகு சீக்கிரத்தில் மனத்தின் முன் நிற்கும். ஒவ்வொன்றையும் சிறுவர்கள் அனுபவவாயிலாக அறிந்து கொள்வது கஷ்டமாகையால் சொற்களே பொருட்களைப் பற்றிய ஒரு சுருக்கமான குறியாகும். சிற்சில சந்தர்பங்களில் சொற்களின் அர்த்தம் வித்தியாசப்பட்டாலும் அவை எப்போதும் குறித்த பொருளின் பெயரையே காட்டுகின்றன.

### சொற்களின் சில அபாயங்கள்

சிந்தனை சக்திக்கும், பொது எண்ணங்களை உணர்த்துவதற்கும், அவசியமாக இருப்பது சொற்களேயாயினும், அவற்றால் சில சந்தர்ப்பங்களில் அபாயமும் நேரிடும். சொல்லுக்கு விசேஷ மதிப்பு ஏற்படுவது, அதன் உபயோகத்தால்தான். ஒரு பொருளையே அது உணர்த்தி, சரியானபடி சிந்திக்க ஓர் அர்த்தத்தையே அது காட்டினால் மிகவும் நல்லது. ஆனால் சில சமயங்களில் மாறான பொருளையும் அது தருகின்றது. சொற்களின் விசேஷம் எத்தன்மையாயின் அவை சந்தர்பங்களை அப்

படியே விவரித்துக் காட்டாது. சம்பவங்களைச் சொல்லின் அர்த்தங்களுக்குத் தக்கவாறு புகுத்த வேண்டுமே தவிர, அவற்றை விரிவாகவும் தெளிவாகவும் சொற்களில் பொருத்த முடியாது.

### ஆசிரியருடைய கடமை

கல்விகற்கும் மாணவர்கள் ஒழுங்கானமுறையில் ஒன்றைக்குறித்து சிந்திக்கவோ கற்பனை செய்யவோ விவரித்துச் சொல்லவோ, வன்மையோடு கூறவோ வேண்டுமானால் ஆசிரியர்கள், சொற்களின் உபயோகத்தை வெகுவாய்க் கவனிக்கவேண்டும். பிள்ளைகளை இஷ்டப்படி சொற்களைப் பிரயோகம்செய்யவிடக்கூடாது. சரியான அர்த்தத்திலும், முறையான வழியிலும், வழுவில்லாமலும், ஒரு பொருளைக் குறிக்கும்படியும், சொற்களை உபயோகிக்கப் பிள்ளைகளைப் பழக்கவேண்டும். புதிய சொற்களை உபயோகிக்கும்போது, அவற்றில் அடங்கிய அர்த்தத்தைத் தெளிவாக விளக்க வேண்டும். அவைகளையே பொதுக் கருத்துக்கு ஒத்தாற்போல் பொருத்திக்கொள்ள வேண்டும். சில கடினமான சொற்களை விளக்க, படங்களைக்கொண்டு காட்டவேண்டும் உதாரணமாக இந்திய பிள்ளைகளுக்கு அயல்நாட்டு விஷயங்களை தெரிவிக்கும் சொற்களை எளிதில் அறிந்துகொள்ள முடியாது. தாய்ப்பாஷைச் சொற்களைத் திட்டமாகவும், கருத்துடனும் அமைத்து உபயோகப்படுத்தியபின்பே வேறு பாஷையை கவனிக்கவேண்டும். திடீரென்று பண்புச் சொற்களையும், விசேஷ அர்த்தமுள்ள சொற்களையும், சிலேடைச் சொற்களையும் (**Pun**) உபயோகிக்கக்கூடாது. சொற்களுக்குத் தகுந்த அர்த்தத்தை விரித்துக் கூற வேண்டுமே தவிர, வேறு ஒரு சொல்லையே அதற்குப் பதிலாகக்கூறிவிடக்கூடாது. "வெகுளி" "கோபம்" "சினம்" முதலிய சொற்கள் ஒருபோதும் ஒரே அர்த்தத்தை தரமுடியாது. இனி மொழிகளே பொதுக் கருத்து அமைவதற்கு கருவியாக இருப்பினும், பொதுக் கருத்து இன்னதென்பதை ஆராய்வோம்.

### பொது எண்ணங்களும்—பண்புக் கருத்துக்களும் (Concepts and Abstract ideas)

பிரத்தியக்ஷ அனுபவத்தால் ஒரு பொருளைக் குறித்து மனத்தில் ஏற்பட்ட உருவமே மானச உருவம். குழந்தையின் மனம் சில காலம் வரையில் பிரத்தியக்ஷ அனுபவத்திலும், கற்பனையிலும் இருக்கலாம். ஒரு குறித்த பொருளைப் பற்றி ஸ்தூலமாகவும் கவனிக்கலாம். ஆனால் குழந்தையானது எப்போதும் ஒரே பொருளை கவனிப்பது இல்லை. பல பொருட்களை அதிகமாகக் காணவும் புது அனுபவங்களை அடையவும், நூதனமான வஸ்துக்களில் அதிக ஆவல் கொள்ளவும், கண்டதைச் சொல்லவும், விரும்புகின்றார்கள். இப்பான்மையுள்ள மனம் உதாரணமாக ஒரு பூனையைப் பார்த்த அளவில், திருப்தி கொள்கிறதில்லை; ஒன்றை மாத்திரம் செய்வதிலும் திருப்தி அடைகிறதில்லை. ஒரு தரம்

பம்பரம் ஆடுவதிலும், ஒரே தரம் ஒரு இன்பமான காக்ஷியைக்காண்பதிலும், ஒன்றைப்பற்றி ஒருதரம் சொல்வதிலும் திருப்தி யடைகிறதில்லை. ஒரு பொருளின் பெயர் தெரிந்தாலும் தெரியாட்டாலும், குணத்தை அறிந்தாலும், அறியாவிட்டாலும், அதைப் பார்ப்பதிலும், அதைப் பற்றிக் கேட்பதிலும், குழந்தைகள் சிறந்த ஊக்கமுடையவர்களாக இருக்கிறார்கள். இப்படி ஒரேவிதமான பொருளைப் பலமுறைப் பார்ப்பதால் அதைப்பற்றிச் சில போதுச் கருத்துக்நள் அமைகின்றன. இக்கருத்துக்கள் ஒரு பொருளைக் கண்டதால் உண்டானவை யல்ல. ஒவ்வொன்றிலும் ஒரு விசேஷ கருத்தமைந்துள்ளது. உதாரணமாக ஒரு குழந்தைத் தன் வீட்டுப் பூனையை முதன் முதல் பார்த்து அதைப்பற்றி தன் மனத்தில் ஓர் உருவமைத்துக் கொள்கின்றது. பின்பு பலதரம் பல பூனைகளைப் பல விடங்களில் காணலாம். இப்படிக் காணும்போது தன் சொந்த பூனையைப் பற்றிய எண்ணங்களைக் கொண்டே கொஞ்சங் கொஞ்சமாக வேறு பூனைகளின் இலக்ஷணத்தையும் அறிவதற்குச் சாதகமான பொதுக் கருத்துக்களை விருத்தியாக்கிக்கொள்ளலாம். ஆனால் இத்தருணத்தில் குழந்தையை, பூனை இன்னவிதமான பிராணி என்பதை விவரித்துக் கூறுமாறு கேட்டால் அது தன் சொந்த பூனையைக் குறித்தே சொல்லும். இன்னும் பூனைகளுக்குப் பொதுவாயிருக்கும் லக்ஷணமும், கருத்தும் திட்டமாக உண்டாகவில்லை. இத்தகைய எண்ணங்கள் எப்போது உண்டாகின்றனவோ அப்போதே சிந்தனை சக்தியும் ஆரம்பித்துவிட்ட தென்று நாம் நினைக்கவேண்டும். ஆனால் இத்தகைய பொது எண்ணங்கள் வெகு சீக்கிரத்தில் உண்டாகா. பல பொருட்களைப் பார்த்து அவற்றை முதன் முதல் ஒப்பிடவேண்டும். பின்பு தனித்தனி வித்தியாசங்களை கவனிக்காமல் பொதுவாக ஒற்றுமைகளையே கொள்ளவேண்டும் பிறகு இவற்றை ஆதாரமாகக் கொண்டு ஓர் இனப்பொருட்களுக்குள் காணும் கருத்தை முறையாக வகுத்திடவேண்டும்.

## ஒப்பிடுதல் ஏன் (Comparison)

குழந்தைகளுக்குக் கிச்சிலிப்பழம், லட்டு, முதலிய தின்பண்டங்களையும் கோலி, பம்பரம், பந்து முதலிய விளையாட்டுச் சாமான்களையும், நாம் கொடுத்தால் உடனே அவைகள், என்ன செய்கின்றன. ஒவ்வொன்றும் தன்னிடத்தில் இருக்கும் பொருளை மற்றொன்றிடம் இருப்பதோடு ஒப்பிட்டுப்பார்க்கிறது. பார்த்த பின்பு எந்தப் பொருள் அழகானது, எது சிறியது, எது பெரியது, எது கனமானது, எது எளிதில் உடையக்கூடியது, எது சுவையுள்ளது முதலிய வித்தியாசங்களையும், எது உருண்டைவடிவமானது முதலிய ஒற்றுமைகளையும், உணர்கின்றது. பலரோடு கூடிவரும் தன் தகப்பனாரை அவருடைய உயரம், பருமன், நடை, உடை முதலியவற்றால் கண்டு அறிந்து, அது சொல்கிறது. இம்மாதிரியே நல்லியையுள்ள பாட்டுக்களையும் வேறு சில பாட்டுக்களோடு

ஒப்பிடலாம். நல்ல சுவையுள்ள பொருட்களை ருசி பார்த்தும், கன மானவைகளைத் தூக்கி உணர்ந்து பார்த்தும் சொல்கின்றது. இப்படி ஒப்பிட்டுப் பார்க்கும்போது, மனமும் வேலை செய்கின்றது. பொருட் களைப் பற்றிய விசேஷக் குணங்களும் ஒருவாறு புலப்படுகின்றன. கவன சக்தியும் வெகு விரைவாக ஒரு பொருளிடம் இருந்து மற்றொன்றிடம் ஒற்றுமை வேற்றுமைகளை உணர்ந்து கொண்டே செல்கின்றது. இப்படிப் பலதரம், ஒரேவிதமான பல பொருட்களைக்கவனித்துக்கொண்டேபோனால் அப்பொருட்களுக்குரிய பொதுக்கருத்தும், அறியாமலே மனத்தில் உண் டாகிவிடுகின்றது. பூக்களையும், காய்களையும் ஒப்பிட்டுப் பார்ப்பதால் யாதொரு பிரயோஜனமும் இல்லை.

## ஒப்பிடுதலுக்குத் தகுந்த நிலைமைகள்

ஒப்பிட்டுப் பார்க்கவேண்டிய பொருட்கள் கூடுமானவரையில் பிரத்தியக்ஷமாக இருத்தல் நலம். குழந்தை தன் முன் வைக்கப்பட் டிருக்கும் வண்ணாத்திப்பூச்சி அல்லது விட்டில் பூச்சி, பித்தளை அல்லது பொன் முதலியவற்றை வெகு எளிதில் ஒப்பிட்டுப் பார்க்கக்கூடும். ஞாப கத்தில் இருக்கும் பொருட்களை ஒப்பிடும்படி ஒரு குழந்தையைத் தூண்டி னால் அது அதற்குச் சம்மதிக்காது. மேலும் குழந்தைகள் ஒப்பிட்டுப் பார்க்கக்கூடிய பொருட்களை எல்லாம் ஒரே இடத்திலாவது ஒன்றுக் கொன்று பக்கத்திலாவது வைப்பது விசேஷம். ஒரு இடத்தில் ஒரு பொருளும் மற்றொரு இடத்தில் இன்னொன்றும் இருக்கும் பக்ஷத்தில் மனமும், கவன சக்தியும் தொடர்ந்தாற்போல் செல்லாது. இதனால் பொது எண்ணங்கள் எளிதில் உண்டாகா. இராகம், இசை போன்ற ஸ்திரமற்ற விஷயங்களை உடனுக்கு உடனே சொன்னால்தான், அவை செவிப்புலனில் தாக்கி விசேஷ லக்ஷணங்களைப் புலப்படுத்தும். இப்படிப் பட்ட புறநிலைமைகளோடு அக நிலைமைகளும், ஒரு பொருளை ஒப்பிட் டுப்பார்க்கச் சரியாக இருக்க வேண்டும். மனமானது, அமைதியாக வும் ஏற்கெனவே ஏற்பட்ட ஒருவிதமான எண்ணம் இல்லாமலும், நல்ல கவன சக்தியோடும் இருக்கவேண்டும். உற்றுப்பார்க்கும் விசேஷத் தன்மை நன்றாக அமைந்திருக்கவேண்டும்.

## ஆசிரியர்கள் என்ன செய்யவேண்டும்

ஒப்பிட்டுப் பார்ப்பதற்குச் சாதகமான பொருட்களையும், சிறு உதவியையும், எப்போதும் தரவேண்டும். குழந்தைகள் தவறுதலாகப் போகும் தருணத்தில் வெகு கவனத்தோடு சிற்சில சிறு வினாக்களால் அவர்களுடைய மனத்தைத் திருப்பவேண்டும். அவர்கள் கண்டதைச் சொற்கள் மூலமாகக் குறிக்கச் செய்யவேண்டும். இச்சொற்களைத் திரும்பச் சொன்னால் அவை பொது எண்ணங்களைக் குறிக்கின்றனவா என்பதையும் அவ்வப்போது பரிக்ஷித்துவிடவேண்டும்.

(தொடரும்)

# எறும்பு

BY **K. S. Chandra Sekharan,** M. A., L. T.

"எறும்பு முதல் யானைவரை" என்று உருவத்தில் சிறியதென்று இதைக் குறிக்கிறோம். ஆனால் அதன் வாழ்க்கையைக் கவனித்தால் நமக்கு ஆச்சரியம் உண்டாகும். இவ்வற்ப பிராணி அறிவுள்ளது, சுறு சுறுப்பு மிகுந்தது. சிருஷ்டியின் உன்னத நிலையிலிருக்கும் மனிதன் சிற்சில சமயங்களில் மறந்து போகும் இயற்கைக் குணமான சமூக வாழ்க்கையைக் கொண்டது.

எறும்பு ஊர்ந்து செல்லும் பூச்சி இனத்தைச் சேர்ந்தது. ஈ, தேனீ முதலியவைகளும் இவ்வினத்தைச் சேர்ந்தவை. உஷ்ண தேசங்கள் எல்லாவற்றிலும் எறும்புகளைக் காணலாம். அவை வசிக்கும் இடம் பல தினுசானது. கற்களின் அடிப்புறமும், சுவற்றின் அடிப்புரத்தில் துவா ரங்களிலும், மரங்களின் பட்டைகளினடியிலும் வசிக்கின்றன. சில பிரம்மாண்டமான புற்றுகள் நிருமாணித்து அதில் வாசம் செய்கின்றன. புற்றினடியில் நாம் பார்த்தால் ஓர் பெரும் நகரத்திலுள்ளதுபோல் குறுக்கு நெடுக்கான பாதைகளும் அவைகள் தங்குவதற்கான வசதி யான இடங்களும் இருப்பதைப்பார்ப்போம். ஒவ்வோர் புற்றுகள் சிறு குன்றவ்வளவு உயரங்கூட இருக்கும். எறும்புகள் ஓரிடத்தை விட்டு மற்றோரிடத்திற்கு நகரும்போது கூட்டம் கூட்டமாக, சாரி சாரியாகப் போவதைக் காணலாம் — என்ன ஒழுங்காகவும், அழகாகவும் முறைபிச காமலும் போகின்றன என்பது நன்கு கவனித்தால்தான் தெரியும்.

பூச்சி இனங்களுக்குள்ள தேக அமைப்பான தலை, மார்பு, அடி வயிறு என்ற மூன்று பிரிவினைகளும் எறும்புகளின் தேக அமைப்பில் உண்டு. அவை தலை மார்பு, அடிவயிறு என்பனவாம். தலையிற் முன் பக்கத்தில் இரண்டு தும்பிகள் (மீசைகள்) உண்டு. மீசைகளின் பின்னால் வட்டவடிவமான கண்கள் இருக்கின்றன. கண்கள் சில எறும்புகளுக்கு விசித்திரமானவை. முக்கண்ணுள்ள எறும்புகளும், ஒன்றைக் கண் எறும்புகளும், கண்களே இல்லாத குருட்டெறும்புகளும் இருக்கின்றன.

தலைவேடிக்கையானது. முக்கோண வடிவமுள்ளது. பின் புறம் அகன்றது. முன்புறம் குவிந்துள்ளது. அடிப்புறம் தட்டை. வாயிலுள்ள நாக்கு சுவையறியும் சக்தியுடையது. மார்பை மூன்று பிரிவுகளாகக் கொள்ளலாம். பிரிவுக்கொருஜதையாக மூன்று ஜதை கால்கள் உண்டு.

எறும்புகளில் பல ரகங்களுண்டு. அவை சிற்றெறும்பு, கட்டெறும்பு (அப்பப்பா ! கடித்தால் வலிதாங்காது) சுள்ளெறும்பு, செல்லெறும்பு என்பவை. இறக்கைஉள்ள எறும்புகளும், இறக்கை இல்லாத எறும்புகளும் உண்டு கட்டெறும்புகளில் ஆண் பெண் உண்டு. பெண் எறும்புகள் பெரியவை. 'செல்' என்று நாம் சொல்வது வெள்ளை எறும்புகள். இவை புத்தகத்தை அரித்துத்தின்று அவற்றிலுள்ள காகிதத்தின் சத்தை ஆகாரமாகக் கொள்கின்றன.

எறும்புகள் சமூக வாழ்க்கையைக் கைக்கொள்கின்றன என்று சொன்னோம். இதையொட்டி, அவைகள் தங்கள் வேலைகளைப் பகிர்ந்து கொள்கின்றன. இதனால் எறும்புக் கூட்டங்களின் வேலை தங்குதடையின்றி சுலபமாக நடந்தேறுகின்றன. அவைகளின் வேலைக்குத் தகுந்தபடி ராஜா எறும்பு, ராணி எறும்பு, வேலைக்கார எறும்பு என்று பிரிக்கலாம். முதலிரண்டிற்கும் தலை முற்பக்கத்தில் குறுகி யிருக்கும். வேலைக்கார எறும்பிற்கு அகன்றிருக்கும். இவற்றிலும் ஆண், பெண் என்ற வித்தியாசம் உண்டு. கொடுக்கு இருக்கும். பெண் எறும்பின் கொடுக்கில் கூர்மையான இரண்டு முட்களும் நடுவில் ஓர் குழாயும் இருக்கின்றன. முட்களால் குத்தி குழாயின் வழியாக ஓர் வித விஷத்தை பெண் எறும்பு குத்தின இடத்தில் புகுத்துகிறது. வேலைக்கார எறும்புகள் குருடு. கண்களுக்குப் பதிலாக தும்பி இருக்கிறது. இதன் உதவியால் அவை வழியறிந்து செல்கின்றன. ராஜாராணி எறும்புகளுக்கு பளபளப்பான இலேசான நான்கு சிறகுகள் உண்டு. இவைகளுக்கு கண்களுண்டு.

வம்சவிருத்திக்காக எறும்புகள் முட்டையிடுகின்றன. முட்டையிலிருந்து புழுக்கள் வெளிவருகின்றன. இப்புழுக்கள் பிறகு கூட்டுப் புழுக்களாக மாறும். இம்மூன்று பருவங்கள் கடந்தபிறகே முழு வளர்ச்சியுள்ள எறும்புகள் வெளிவரும் கடைசிப் பருவத்தில் அவற்றின் தேகம் ஓர் மெல்லிய போர்வையால் மூடப்பெறுகிறது. இதுதான் கூட்டுப்புழு. முட்டையிலிருந்து சரியான எறும்புருவத்தை அடைவதற்கு சுமார் 45 நாட்களாகும். எறும்புகள் இந்த காலத்தில் தோல் உரிப்பதும் உண்டு.

எறும்புகளில் மற்றொரு வகை பசு எறும்பு இவற்றின் தேகங்களின் பின்னால் இரண்டு குழாய்கள் இருக்கின்றன. இவ்வெறும்புகள் மரங்களில் ஏறி அவற்றின் சாரத்தை உறிஞ்சுகின்றன். இது எறும்பின் தேகத்தில் ஓர் வித தேனாக மாறுகிறது. இந்தத் தேன் அக் குழாய்களின் வழியாக வெளியே வருகின்றன. இதை மற்ற எறும்புகள் உண்கின்றன. இப்பசு எறும்புகளை மற்ற எறும்புகள் சாக்கிரதையாக பொழித்து வளர்க்கின்றன. பசு எறும்புகளுக்கு செடிப்பேன் என்றும் பச்சை ஈ என்றும் வேறு பெயர்களுண்டு. ஏனெனில் அவை சிறு செடிகளின் இலைகளிலும் தண்டு, வேர்களிலும் இருக்கும். வண்டுபோலிருக்கும்.

எறும்புகளில் இன்னம் அநேக விதங்களுண்டு. பயிரிடும் எறும்புகள், குடை எடுக்கும் எறும்புகள் விளையாட்டு எறும்புகள்—என எண்ணிறந்த வகையின. அவைகளின் வாழ்க்கை விநோதமானது, அறிவூட்டுவது.

கோடைகாலத்தில் எறும்புகள் சாரை சாரையாக, சுறு சுறுப்புடன் ஊர்ந்து செல்வதை நாம் பார்க்கலாம். அவை ஆகாரம் தேடிச் செல்கின்றன. தாம் கண்டுபிடித்த ஆகாரத்தை தம் வாசஸ்தலங்களுக்கு கொண்டுவந்து சேமித்து வைக்கின்றன. அவைகளுக்குள்ள சக்தியினால் ஆகாரம் இருக்கும் இடத்தை அறிந்துகொள்கின்றன. இதை வெயிற் காலத்தில் சேகரித்து வைத்து, மழைகாலத்தில் சிரமமில்லாமல் உண்ணுகிறது. மழைகாலத்தில் எறும்புகள் வெளிவருவதில்லை. ஆகாரம் சேர்த்து வைத்துக்கொள்வதில் அவை ஒன்றுக் கொண்டு உதவி புரிந்து கொள்கின்றன. விரோதிகளை எதிர்க்கின்றன.

எறும்புகள் விவேகத்துடன் சமூக வாழ்க்கையை ஒழுங்குபடுத்தி ஜீவிப்பதுபோல் நாமும் ஜீவிக்கவேண்டும்.


# தென் இந்தியா கோவாபரேடிவ் இன்ஷூரன்ஸ் சொசைட்டி லிமிடெட்

சார்டர்ட் பாங்க் கட்டிடம், மதரூஸ்.

பிரஸிடெண்ட்: கனம் வி. ராமதாஸ் பந்துலு, பி.ஏ., பி.எல்.

## சிறந்த முறைகள்

அரசாங்கத்தாரின் மேல் பார்வையும், தணிக்கையும்,
கூட்டுறவு முறையில் அனுபவம் வாய்ந்த பெரியோர்களால் நடத்தப்படுவது,
வெளி ஜில்லாக்களில் நன்கு உழைக்கும் அதிகாரிகள்,
சாக்கிரதையான நிரந்தர சொத்துகள்,
வருஷந்தோறும் உயர்ந்து வளர்ச்சியடையும் புதிய பாலிஸிகள்,
குறைந்த பிரிமியம், நல்ல போனஸ்,
இவையாவும் இந்த சொசைட்டியின் தனிச் சிறப்புக்கள்.

இன்ஷூர் செய்துக்கொள்ள விரும்பும் ஒவ்வொருவரும் இவைகளைக் கவனிக்கவேண்டும்.

ஏஜெண்டாக இருக்க விரும்புகிறவர்கள் கடிதம் எழுதினால் விவரங்களை அனுப்புகிறோம்.

வி. வெங்கடாசலம், எம்.ஏ., பி.எல்.
காரியதரிசி.

# நற்போதனைகள்—2

## (மாதா பிதா)

---

(V. N. கிருஷ்ணசாமி, ஆசிரியர், செங்குந்தர் பாடசாலை, துறையூர்.)

1. அருமைச் சிறுவர் களே—என்றும்
அன்னைத் தந்தையினடி பணிவீர்களே.

2. மாதா பிதாக்களின் நெஞ்சம்—நோக
தீது புரிதலென்றும் வஞ்சம்.

3. பத்துத்திங்கள் சுமந்து உன்னை—பெற்று
பாங்குடன் வளர்த்தவ ளன்னை.

4. நாவுக்குருசியான பண்டங் தன்னை—கொடுத்து
நயந்து விளையாடுபவ ளன்னை.

5. மாதா பிதாவுக் காங்காரம்—உண்டாக்கும்
மக்கள் மாக்களாவா ராம்.

6. அன்னை தந்தையின் சொல்(லு)—என்றும்
ஆதார மாகவே கொள்ளு.

7. பெற்றோர் களுக்கு துரோகம்—செய்யும்
பிள்ளைகளைச் சுற்றும்பாவம் அநேகம்.

8. தாய்தந்தை சாபம் பொல்லாது—இதை
தரணிக் கெல்லாம் எடுத்தோது.

9. பெற்றோர்களே முதல் தெய்வம்—வித்தை
கற்பித்தவர் மறு தெய்வம்.

10. இப்பிள்ளையின் பெற்றோரே சிரேஷ்டர்—என்று
இப்புவியோர் சொல்ல நடப்பீர்.

(அருமைச் சிறுவர்களே)

# 31-வது சென்னை மாகாண கல்வி மகாநாடு அம்பாசமுத்திரத்தில் நடைபெற்றது

---

முப்பத்தொன்றும் மாகாணக் கல்வி மகாநாடு சென்ற மேமீ 27, 28, 29-ம் தேதிகளில் அம்பாசமுத்திரத்தில் கூடியது. அழகான பச்சைத் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்ட பெரிய பந்தலில் 27உ காலை 9 மணிக்கு நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் குழுமியிருக்க, ஸ்ரீ ரோச் - விக்டோரியா தமது வரவேற்புப் பிரசங்கத்தைச் செய்து முடித்தபின், டாக்டர் லக்ஷ்மணசுவாமி முதலியார் மகாநாட்டுக்குத் தலைமை வகிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டார். பலத்த கரகோஷங் களுக்கிடையில் டாக்டர் லக்ஷ்மணசுவாமி முதலியார் அக்கிராசனம் வகித்து கல்வி மகாநாட்டை ஆரம்பித்தார்.

டாக்டர் லக்ஷ்மணசுவாமி முதலியாரவர்கள் தமது பேருரையில் சென்னை மாகாணக் கல்வி நிலைமையைப்பற்றிப் பல விஷயங்களை எடுத் துரைத்தார். தலைவர் அவர்கள் செய்த சொற்பொழிவின் சுருக்கம் இங்கே கொடுக்கப்பட்டிருக்கிறது.

## தலைவர் உரை

தென் இந்தியா ஆசிரியர் சங்கம் எனக்கு இப்பெரும் பதவியைக் கொடுத்ததற்காக என் மனமார்ந்த வந்தனத்தைத் தெரிவிக்கின்றேன். உலகத்தில் பெரிய போர் நடந்துவரும் இக்காலத்தில் நாம் இங்கே கூடி யிருக்கிறோம். 'வல்லான் வகுத்ததே வாய்க்கால்' என்னும் கொள் கையைக் கடைப்பிடித்த எதிரிகள் உலக சுதந்தரத்தையே குலைத்துவிடு வார்கள் போலிருக்கிறது. தருமமும் நியாயமும் தழைக்க வேண்டு மென்றும், நேசக்கட்சியினர் வெற்றி பெறவேண்டுமென்றும் நாம் இறை வனைப் பிரார்த்திப்போமாக.

## மகா யுத்தம்

இந்த மகா யுத்தத்தைப்பற்றி நினைக்கும்போது எனக்கு ஒரு எண்ணம் உதித்தது. அளவுகடந்த தேசியம்தான் இந்த யுத்தத்திற்குக் காரணம். ஒவ்வொரு நாட்டு மக்களும் தமது தேசத்தின்பால் காட்டும் தேசபக்தியின் காரணமாக மற்ற நாடுகளை துவேஷிக்கின்றனர். ஸ்ரீமதி சரோஜினி தேவியார் சொல்லுகிறபடி தேசபக்தி மாத்திரம் இருந்தால் போதாது. மனித சமூகத்தின்மீது அன்பும் அதனுடன் கலந்திருக்க வேண்டும். மற்ற தேசத்தினர்களின் கடமைகளையும் உரிமைகளையும்

பாதுகாக்கும் மனப்பான்மையும் உண்மையான தேசபக்திக்கு அடிப்படையாகும். சகோதரத்துவமும் அன்பும் அவசியமென்று எல்லா நாட்டினரும் நன்று அறியவேண்டும். தம்மிடம் கல்வி கற்கும் இளம் பிள்ளைகளுக்கு இந்த உபதேசத்தைச் செய்வது ஆசிரியர்களின் கடமையாகும். நமது நாட்டின் நிலைமையை நோக்கும்போதுகூட இதே எண்ணம் எனக்கு உண்டாகிறது. நாட்டில் சமயச்சண்டைகளும் பூசல்களும் மிக்கிருக்கும் இந்நாளில் 'இந்தியர் அனைவரும் சகோதரர்கள், ஒவ்வொருவரும் மற்றோர்பால் அன்புபூண்டு வாழவேண்டும்' என்று சிறுவர்களுக்கு உபதேசம் செய்யவேண்டியது அவசியம்,

## இரண்டு விஷயங்கள்

இவ்வித மகாநாடுகளில் ஆசிரியர்கள் கூட்டங்கூடி இரண்டு முக்கியமான விஷயங்களைப்பற்றி ஆராய்தல் வேண்டும். ஆசிரியர்கள் தேச நலத்திற்காக இன்னும் எவ்விதங்களில் உழைக்கலாம், தம்மிடம் கல்வி கற்கும் சிறுவர்களை எவ்வாறு ஆரோக்கியமும் சீலமுங்கொண்ட பிரஜைகளாகச் செய்யலாம், என்ற விஷயங்களைப்பற்றி ஆராய்ந்து முடிவுக்கு வருதல் அவசியம். இரண்டாவதாக, தமது தொழில் முறைகளில் இருக்கும் குறைபாடுகளைத் தீர்த்துக்கொள்ளுவதற்கு வேண்டிய வழிகளைத் தேடுவது.

முதல் விஷயத்தைக் கவனிப்போம். தற்காலத்தில் இருந்து வரும் கல்வி திட்டத்தைக் குறை கூறுதவர் இல்லை. உலகத்தில் பல மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றன. எந்தப் பழைய கல்வித் திட்டமும் திருத்தியமைக்கப்பட்டாலொழிய பயன்படாது, புதுத்திட்டம் என்று ஒரு திட்டத்தைக் கொண்டுவருவது சுலபமாக இருக்கிறதா ?

## கல்வியின் நோக்கம்

கல்வியின் நோக்கமாவது சமூகத்தில் ஒவ்வொருவரும் ஆரோக்கியமும் குணமும் உள்ள நல்ல பிரஜைகளாக வாழவேண்டுவதுதான், கல்விச்சாலைகளில் ஒருவன் பெரும் பயிற்சி பின்னல் அவனை உழைப்பாளியாகச் செய்து, சமூகத்திற்கு அவனால் நன்மை உண்டாகும்படி செய்யவேண்டும். இவ்வித பரந்த நோக்கத்துடன் கல்வி திட்டத்தை வகுப்பதானல், அது காலத்திற்கும் இடத்திற்கும் தகுந்தவாறு மாறுபட்டுப் பலவிதமாகத்தான் இருக்கும். நாடு முழுவதும் ஒரேவித திட்டம் நிலவிவர வேண்டுமென்பதில்லை,

கல்வி திட்டத்தில் பல படிகள் உள, நம் நாட்டில் மூன்று படிகள் இருந்து வருகின்றன: முதலாவது ஆரம்பக் கல்வி, இரண்டாவதாக உயர்தரக் கல்வி, மூன்றாவதாக யூனிவர்ஸிடிக் கல்வி, முதல் படியான ஆரம்பக் கல்வியின் நோக்கம் நாட்டிலுள்ள எல்லோரும் எழுதப் படிக்கத் கதரிந்துகொள்ளுதல்தான், படிக்கத்

தெரிந்த ஒருவன் தன் முயற்சியினால் பல விஷயங்களைத் தானே கற்றுக் கொள்ளக்கூடும். ஆதலால், அவன் மேல் வகுப்புகளுக்குச் சென்று படித்தாலும் படிக்காவிட்டாலும், சமயம் நேர்ந்தபொழுது தனக்கு அவசியமானதைத் தானே தெரிந்துக்கொள்ளும் ஆற்றல் உள்ளவனாவான் என்பது நிச்சயம். ஆகையினால் தான் நமது தேசத்தில் எல்லாருக்கும் எழுதவும் படிக்கவும் சொல்லிக்கொடுக்கவேண்டும் என்றும், இப்பெரும் வேலையை அரசாங்கத்தாரே ஏற்று நடத்தவேண்டுமென்றும் சொல்லப்படுகிறது. அதாவது ஆரம்பக்கல்வி இலவசமாகவும் கட்டாயமாகவும் கொடுக்கப்படவேண்டும் என்பதே.

உயர்தரக் கல்வியை இரண்டாம்படி என்று சொல்லலாம். இப்படியைக் கடந்தவன் ஒரு தொழிலில் அமர்ந்து சம்பாதிக்கும் திறமை பெறவேண்டும். அல்லது மேலே படித்து ஒரு சாஸ்திரத்தில் வல்லவனாகும் திறமை பெறவேண்டும்.

யுனிவர்ஸிடி அல்லது பல்கலைக் கழகங்களுக்குச் சென்று படித்தல் மூன்றாம்படி. அவ்வாறு வாசிப்பவர்கள் எந்த நாட்டிலும் சிலர்தான்.

கல்வித் திட்டம் எவ்வகைத்தாயினும், இந்தியாவைப் போன்ற பரந்த தேசத்தில், இடத்திற்குத் தகுந்தவாறு அது மாறுபட்டுத்தான் நிற்கும். ஒரு மாகாணத்திற்குகந்த திட்டம் மற்றொரு மாகாணத்தில் அதிக பலன் தராது போகலாம். கல்வி திட்டத்தின் இலட்சியம் ஒன்றாயிருப்பினும், அது காலதேச வர்த்தமானங்களுக்கேற்ப மாறுதலடைந்து நடப்பது சகஜம்.

## ஆரம்பக் கல்வி

ஆரம்பக் கல்வி சில வருஷங்களாக முன்னேற்ற மடைந்து வந்திருக்கிறது. ஆனாலும் எழுதப்படிக்கத் தெரியாதவர் பலர் இருப்பதனால் ஆரம்பக்கல்வி வளர்ச்சிக்கு அதிக இடமிருக்கிறது. ஆரம்பப் பாடசாலைகளில் போதிப்பது அதிக சிரமமான காரியம். இங்குதான் நல்ல திறமையுள்ள ஆசிரியர்கள் தேவை. இடத்திற் கேற்றபடி பள்ளிக்கூட காலத்தை மாற்றி யமைத்துக்கொள்ளவேண்டும். புது முறைகளில் போதிக்கவேண்டும். இப்படிச்செய்தால் மூன்று அல்லது நான்கு வருஷங்களில் பாடசாலைக்கு வரும் ஒவ்வொரு சிறுவனும் எழுதப் படிக்கக் கற்றுக்கொண்டு விடுவான்.

உயர்தர பாடசாலைகளைப் பற்றியும் பல குறைகள் சொல்லப்படுகின்றன. அவைகளின்மீது யுனிவர்ஸிடியின் ஆதிக்கம் அதிகமிருக்கிறதென்றும் சொல்லப்படுகிறது. உண்மையில் ஹைஸ்கூல்களில் படிப்பவர்களெல்லாம் யுனிவர்ஸிடி படிப்புக்குச்செல்ல வழி தேடுகிறார்களே தவிர வேறு தொழில் சம்பந்தமான படிப்பை நாடுவதில்லை. இந்த நிலைமைகூட மாறுதலடைந்துக் கொண்டு வருகிறது. உயர்தரப் பள்ளிக்கூடங்களில் பலவித தொழில்களுக்கு உதவக்கூடிய கல்வியைக் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்தால் இப்போதைய நிலைமை திருந்திவிடும் என்பதில் ஐயமில்லை.

பிள்ளைகள் எந்த மொழியின் வாயிலாகத் தமது பாடங்களைக் கற்கவேண்டும் என்பது ஒரு முக்கிய பிரச்னை. தாய்மொழியின் மூலமாகத் தான் கல்வி கற்கவேண்டும் என்றுசொல்லுவது அனுவசியம். தாய் மொழியை போதிப்பதில் புதிய முறைகள் கையாளப்பட வேண்டும்.

## ஆசிரியர்களின் நிலைமை

ஆசிரியர்களின் நிலைமையைப் பற்றியும் ஆசிரியத்தொழில் நலன் களைப்பற்றியும் ஆராய்வதற்கு இம்மகா நாட்டில் கூடியுள்ள உங்களுக்கு விருப்பமிருக்கும். ஆசிரியர்கள் தமது கடமையைச்செய்ய பலவித சௌகரியங்கள் இருக்கவேண்டும். சமூகத்தில் உபாத்தியாயர்களை மாத்திரம் பணத்தை எதிர் பாராமல் ஸாத்வீக வாழ்க்கை வாழும்படி சொல்வதில் அர்த்தமில்லை. செலவைக் குறைப்பதற்காக ஏதாவது திட் டம் அமுலுக்கு வரும்போதெல்லாம் ஆசிரியர்களின் சம்பளம் குறைக் கப்படுகிறது. பொதுநன்மைக்கென ஏதாவது புதிய திட்டம் அமுலுக்கு வரும்போதும் உபாத்தியாயர்களின் சம்பளத்தைக் குறைத்து அதனுல் ஏற்படும் ஆதாயத்தைக்கொண்டு ஆடம்பரமாக வேலை செய்கின்றனர்• இவ்வித ஏற்பாடுகளினுல் கஷ்டப்படுகிறவர்கள் பெரும்பாலும் ஆரம்ப ஆசிரியர்களே. சாதாரணமாக சிறு குழந்தைகளுக்குக் கற்பிக்கும் வேலை மிகவும் சிரமமானது. சரியான சம்பளமும், தொழின்முறையில் சௌகரியமும் ஆரம்பாசிரியர்களுக்கு இல்லாததனுல் நன்கு படித்தவர் கள் அவ்வேலைக்கு வருவதில்லை. ஆரம்பப்பாடசாலைகளில் திறமைமிக்க ஆசிரியர்கள் இருந்தால்தான் தேக்கமும் சிதறுதலும் குறைந்து கல்வி பரவுவதற்கு சாத்தியமாகும். சென்ற இருபது வருஷங்களில் பள்ளிக் கூடங்கள் அதிகமாக ஏற்பட்டுவிட்டன என்பதை நோக்கில் நமக்கு திருப்தி யுண்டாகிறது. ஆனுல் ஸ்தல ஸ்தாபனங்கள் அதிக பள்ளிக் கூடங்களை ஸ்தாபித்தார்களே யொழிய பணத்திற்கு வழி செய்யவில்லை. அதனுல் பணமுடை ஏற்பட்டுவிட்டது. உபாத்தியாயர்கள் சம்பளமும் குறையலாயிற்று.

மேலும் ஸ்தல ஸ்தாபனங்களை நிர்வகிக்க முன் வந்த பொது மக்கள் தமது கடமையை அறியவில்லை. தமது அதிகார தோரணையை உணர்ந்தார்களே யொழிய சமூகத் தொண்டாற்றும் பண்பைப் பெற வில்லை. ஆசிரியர்கள் தமது வேலைக்காரர்கள் என்றுகூட நினைத்துவிட்ட னர்போல் தோன்றியது. தமது இஷ்டப்படி உபாத்தியாயர்களை மாற்றி யும், வேலையிலிருந்து நீக்கியும், உபத்திரவம் செய்யலாயினர். பாடசாலை களின் நிர்வாகத்தில் தலையிட்டனர். இவ்வித இடையூறுகளை ஸ்தல ஸ்தாபன அதிகாரிகள் உண்டாக்கிவந்தால் ஆசிரியர்கள் எவ்வாறு தமது வேலையைச் செய்ய முடியும்?

அரசாங்கத்தார் இந்த ஊழல்களை தடுப்பதற்கென பல ஏற்பாடு கள் செய்யவேண்டியதாயிற்று. பொதுவாக ஸ்தல ஸ்தாபனங்களை

நிர்வகிக்கும் கனவான்கள் ஒரு திட்டத்தை வகுத்து, அதிகாரிகளின் மூலமாக அதை நடத்த வழி தேடவேண்டுமேயொழிய தாம் இஷ்டப்படி எல்லாக் காரியங்களிலும் தலையிட்டு மனம்போன போக்காக நடந்து கொள்ளக்கூடாது. ஸ்தல ஸ்தாபனங்களில் இவ்வித மனப்பான்மை ஏற்பட்டால்தான் சுய ஆட்சி இனிது நடைபெறும்.

## உரிமை சாசனம்

கடந்த இருபது ஆண்டுகளில் ஏற்பட்ட மாறுதல்களை நோக்கின், ஆசிரியர்கள் தம்முடைய உரிமைகளைப்பற்றியதொரு சாஸனம் அரசாங்கத்தாரிடமிருந்து பெறுவது அவசியம் என்று எனக்குத் தோன்றுகிறது. வேலை சாசுவதமாக இருக்க வேண்டுமென்றும், வாழ்க்கை நடத்துதற்கு வேண்டிய சம்பளம் பெறவேண்டு மென்றும், அனுவசியமாக யாவரும் தமது வேலையில் தலையிடக் கூடாதென்றும், வேலை நீக்கம் தண்டனை முதலியவற்றிற்காக அப்பீல் செய்துகொள்ள ஒரு போர்ட் வேண்டுமென்றும் ஆசிரியர்கள் அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்ள வேண்டும்.

கல்வி இலாகா அதிகாரி ஆசிரியர்களுக்கு உதவிசெய்ய பல கடவை முன் வந்துள்ளார். தற்போது டைரக்டராக இருக்கும் ஸ்ரீ ஸ்டாதம் அவர்களுக்கு எல்லா ஆசிரியர்களும் மிகவும் கடமைப்பட்டிருக்கின்றனர். அவர் ஆசிரியர்களின் கஷ்டத்தை அறிந்தவர். ஆசிரியர்களின் குறைகளை நீக்குவதில் கருத்துள்ளவர். அவருடைய உதவியினுல் ஆசிரியர்கள் கல்வித்துறையில் எல்லா விதங்களிலும் முன்னேற்றமடைவார்கள் என்பது நிச்சயம். கல்வியின் நலனுக்காக முழுமனதுடன் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம் என்று உங்கள் சார்பாக நான் அவருக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

## அப்பீல் போர்ட்

ஸ்தல ஸ்தாபனங்களிலும் மற்ற பள்ளிக்கூடங்களிலுமிருக்கும் ஆசிரியர்கள் அப்பீல் செய்துகொள்ள ஒரு சபை வேண்டுமென்று சொன்னேனல்லவா? அச்சபையில் உபாத்தியாயர்களின் பிரதிநிதியும் மானேஜ்மெண்டாரின் பிரதிநிதியும், கல்வி இலாகாவின் பிரதிநிதியும், கல்வி நிர்வாகத்தில் அனுபவம் மிக்க ஒருவரும் இருக்கவேண்டும். இம் மாகாணத்தை மூன்று நான்கு பாகங்களாகப் பிரித்து, ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு சபை ஏற்படுத்துவது உசிதமாயிருக்கும்.

## ஆசிரியர்களின் கடமைகள்

இதுகாறும் ஆசிரியர்களுக்குள்ள குறைகளையும், அவைகளை நீக்குவதற்கான வழிகளையும் பற்றிப் பேசினேன். இனி ஆசிரியர்களின் கடமைகளைப்பற்றிச் சிறிது சொல்வேன். ஆசிரியர் தொழில் மிகவும் உத்தமமானதென்பதில் சந்தேகமில்லை. ஆனல் நமக்குள்ளே அத்

தொழிலின் பெருமையையும் உத்தம குணத்தையும்பற்றிப் பேசிக் கொள்ளுவதிற் பயனில்லை. தொழில் உத்தமமானதென்றால் அதை பிறர் மதிக்கவேண்டும். ஆசிரியர்கள் தம் தொழில் முறையில் முன்னேற வேண்டும். உயர்ந்த லக்ஷியங்களுடன் தொண்டாற்ற வேண்டும். எந்த ஆசிரியராவது இத்தொழிலின் மேன்மையைக் குலைக்குமாறு நடந்து கொண்டால் அதைத் தைரியமாகக் கண்டிக்கவேண்டும். தன்னிடம் கல்வி பெறும் மாணுக்கர்களுக்கன்றி, பொது ஜனங்களுக்கே வழிகாட்டியும், குருவும், தோழனுமாக இருந்து சமூகத்தின் நன்மைக்கே உழைத்து வரவேண்டும்,

ஆசிரியர்கள் இத்தகைய உத்தமமான தொண்டு ஆற்றவேண்டுமென்று நினைத்துக்கொண்டிருக்கும் எனக்கு சிற்சில இடங்களில் அவர்கள் சட்டமறுப்பு, மறியல் முதலியன செய்வதாகத் தெரிந்தவுடனே மிகவும் வருத்தம் ஏற்பட்டது. இம்முறைகள் ஆசிரியர்களுக்குச் சரியானவைகளல்ல. இம்முறைகளினால் ஒருவித நன்மையும் உண்டாகாது.

சில பள்ளிக்கூடங்களில் நடக்கும் சாதாரண நிகழ்ச்சிகளை ஆசிரியர்கள்விளம்பரப்படுத்திக்கொள்ளுவதை நாம் பார்க்கிறோம். அனுவசிய விளம்பரம் விரும்பத்தக்கதல்ல.

பல பள்ளிக்கூடங்களில் மாணுக்கர்கள் ஜாதி, மதம், பாஷை, பிரதேசம் முதலியவைகளைப் பெரிதாக மதித்து வகுப்புவாரியாக சங்கங்களையும், பிறவற்றையும் ஏற்படுத்திக்கொள்ளுவதை அறிவோம். இவ்வித வகுப்புவாரி திட்டம் நம் நாட்டிற்கு நன்மை செய்யாது. மாணுக்கர் அனைவரும் ஒன்றுசேர்ந்து காரியங்கள் செய்யவேண்டுமேயொழிய பிரிவுகள் ஏற்படுத்துவது உசிதமல்ல.

இக்காலத்தில் கல்வி கற்பதென்றால் அனுவசியமான அதிக செலவுகள் பல ஏற்படுகின்றன. சம்பளம் அதிகமாக இல்லாவிட்டாலும் புத்தகங்கள், நோட்புக்குகள் முதலியவைகளினால் ஏழைப்பிள்ளைகளுக்கு அதிக சிரமமுண்டாகிறது. இவ்வித செலவுகளைக் குறைப்பதற்கு ஆசிரியர்கள் வழி தேடவேண்டும்.

முடிவாக, பலவித மாறுதல்கள் ஏற்பட்டுவரும் இக்நாளில் தம்மிடம் கல்விகற்கும் இளைஞர்களுக்கு ஆசிரியர்கள் உயர்ந்த லக்ஷியங்களைக் கற்பித்து நாட்டின் முன்னேற்றத்திற்கு உழைக்கின்றார்கள் என்பது உணரவேண்டும் ஆண்டவன் அருளினால் ஆசிரியர்கள் தமது உத்தமத் தொழிலை உயர்ந்த லக்ஷியங்களுடன் நடத்தி நாட்டிற்கு அணிகலன்கள்போல் இருப்பார்களாக.

மகாநாட்டு பொருட்காட்சியை பிஷப் பெரியார் ரோச் பிறகு திறந்து வைத்தார். கல்வியைப்பற்றிய பல முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஆரம்பக் கல்வியைப்பற்றித் தனியாக ஒரு சர்ச்சை நடந்தது. ஆரம்பக் கல்வியின் விஷயமாகவும் சில முடிவுகள் செய்யப்பட்டன. அவைகளைப் பத்திராதிபர் குறிப்புகளில் காணலாம்.

பின்பு, மகாநாடு முடிவில் டாக்டர் லக்ஷ்மணசுவாமி முதலியார் தாம் தம்மாலான உதவியை உபாத்தியாயர் சங்கத்துக்கு செய்வதாக உறுதி கூறினர். மகாநாடு இனிது முடிவுற்றது.

# ஆட்சி நூல்

## முதல் வகுப்பு : இரண்டாம் மாதம்

மரியாதை—பெரியோர்களிடம், அன்பு—சிறியோர்களிடம், தயை—பிராணிகளிடம்.

சம்பாஷணையின் மூலமாக பெரியோர்கள் சிறியோர்கள் யாவர் என்பதை சிறுவர்களுக்கு உணர்த்தவேண்டும். பிறகு தாய், தந்தை, மூத்த சகோதர சகோதரிகள், மற்றுமுள்ள பெரியோர்களிடம் எவ்விதம் நடந்துக்கொள்ளுவது என்பதைச் சொல்லவேண்டும். மரியாதையாக நடத்தல்—சிறியோர்களுடன் சண்டை போடுதல்—சிறுவர்களை அடித்தல், பயமுறுத்தல், ஏசுதல் முதலியவை கூடாதென்று கற்பிக்கவேண்டும்.

மனிதனுக்கு உதவிசெய்யும் பிராணிகளைப்பற்றிப் பேசி, அவைகளை நடத்தும் விதம் என்னவென்று சொல்லுவது.

பாட்டுகள் :—மரியாதையுடன் நடந்துக்கொள்ள வேண்டியதன் அவசியம்.

அன்பின் அவசியம்.

பசு, எருது, நாய், பூனை முதலிய மிருகங்களைப்பற்றிய சிறு பாட்டுகள்.—இவைகளின் உபயோகங்கள்.

நடிப்பு :—பெரியோரை சந்தித்த —உபாத்தியாயர், தந்தை, முதலியவர்களை சந்திப்பதாக நடிக்கச் சொல்லலாம்.

தாய்மொழிப் போதனையின்போது கற்பிப்பதற்கென புது வார்த்தைகளை சேகரித்துக் கொள்ளல்.

அட்டைகளில் தந்தை தாய்ப்பேண்—பசு பால் கொடுக்கும், இவைகளைப்போன்ற வாக்கியங்களை எழுதி வைத்துக்கொண்டு விளையாடச் சொல்லலாம்.

## இரண்டாம் வகுப்பு : இரண்டாம் மாதம்

உபாத்தியாயர், மாணவர், பரஸ்பர நன்மைகள்

சம்பாஷணை :—பள்ளிக்கூடம் எப்படிப்பட்ட இடம்? கல்வி கற்பிப்பது யார்? மாணவர்கள் எழுதவும் படிக்கவும் ஏன் கற்றுக் கொள்ள வேண்டும்? என்பன போன்ற விஷயங்களை சுலபமான வழியில் சம்பாஷித்தல்.

குரு, சிஷ்யர்களைப்பற்றிக் கதைகள் சொல்லலாம். உ-ம். ஏகலைவன் ; அர்ச்சுனன். குரு பக்தியும் படிப்பில் சிரத்தையும் உண்டாக்கக் கூடிய கதைகள் மேலானவை.

இக்கதைகளை நாடகமாக நடித்தல்.

பழைய நாட்களில் பள்ளிக்கூடங்கள் எப்படி யிருந்தன : குரு குலம்,

*தாய்மொழி போதனையின்போது கற்பிப்பதற்கென புது வார்த்தைகளை ஆசிரியர் சேகரித்தல்.*

விளையாட்டு:—*குடும்பத் தலைவர் பிள்ளையை பள்ளிக்கூடம் அனுப்புதல்—உபாத்தியாயர் கல்வி கற்பித்தல்—கல்வி முடிந்தபின் பையன் வாழ்க்கையைப்பற்றி யோசித்தல் முதலான விஷயங்களை அடிப்படையாகக்கொண்ட விளையாட்டுகளை ஐந்தாறு சிறுவர்களை விளையாடச் சொல்லவேண்டும். மற்ற சிறுவர்கள் பார்த்துக்கொண்டிருக்கவேண்டும். பிறகு அவர்களும் இந்த விளையாட்டை விளையாடலாம்.*

## மூன்றும் வகுப்பு: இரண்டாம் மாதம்

தொழிலாளருக்கு நாம் செய்யவேண்டியவை.

*சம்பாஷணையின் மூலமாக தொழிலாளர்களையும், அவர்களின் குடும்பம், வீடு, தேவைகள் முதலிய விஷயங்களை எடுத்துச் சொல்லுதல்.*

*மனிதர்களன்றி, சில மிருகங்களும் மனிதனுக்குத் தொழில் செய்கின்றன. ஏர் மாடு, வண்டி மாடு, எருமை, பசு, குதிரை, கழுதை முதலியன.*

*அப்படிப்பட்ட மிருகங்களை நாம் எவ்வாறு காப்பாற்றவேண்டும்.*

*தொழிலாளனிடம் அன்பு காட்டல்; தயை ஆதரவு முதலிய குணங்கள்.*

பாட்டுகள்:—*தொழிலாளன் அடிமையல்ல. அவனுக்கு ஏற்படும் கஷ்டங்களை நீக்கவேண்டும்.*

*பலவித தொழில்களைப்பற்றிய பாட்டுகள்.*

## நான்காம் வகுப்பு: இரண்டாம் மாதம்

பிறருக்கு பரவக்கூடிய உபாதைகள். முற்பாதுகாப்பு முறைகள். நாடோறும் கைக்கொள்ளவேண்டிய தூய வாழ்க்கைக்குரிய நெறிகள்.

*மனிதருக்கு ஏற்படும் உபாதைகள்.*

சாதாரண மானவை:—*ஜலதோஷம், தலைவலி, உடல்வலி முதலியன.*

வியாதிகள்:—*அம்மை, முறை ஜுரம், காலரா, முதலியன.*

*ஜனங்கள் வியாதி வரும்போது என்ன செய்கின்றனர் என்பதைப் பற்றி சம்பாஷித்தல்.*

*சில உபாதைகள் துரிதமாக பரவுகின்றன.*

*பொதுவாக உபாதைகளைத் தடுக்கலாம்.*

தடுக்கும் முறைள்:—*தூயவாழ்க்கை, நல்ல ஜலம், நல்ல காற்று, ஆகாரம், நல்லொழுக்கம் முதலியன.*

வேலை, ஓய்வு.

அம்மை குத்திக்கொள்ளுதல், இனாகுலேஷன், முதலியன.

தூய வாழ்க்கைக்குறிய நெறிகளை சிறு சிறு வாக்கியங்களாக அட்டைகளில் எழுதி சுவற்றில் தொங்கவிடுதல்.

பாட்டுகள்.

விளையாட்டு :—ஆஸ்பத்திரி விளையாட்டு, டாக்டர், நோயாளி, சிகித்சை.

## ஐந்தாம் வகுப்பு : இரண்டாம் மாதம்

உண்ட உணவு சேரிக்கும் முறையும், சீரணமாகித் தேகத்திற் பரவும் வகையும்; உடலோம்பல்.

உடலின் உறுப்புக்களைப்பற்றி உரைக்கும்போது, மிகவும் பொது வான தொழில்களையே உணர்த்தவேண்டும்; இவற்றை விளக்கும் படங் களைத் தாராளமாகக் கையாளவேண்டும்.

நாம் உணவு உண்பது; மற்ற ஜீவஜந்துக்கள் உணவு உட் கொள்ளுவது; தாவரங்களுக்கு உணவு தேவை. உணவு உயிர் வளர்ச் சிக்கு இன்றி யமையாதது.

மனிதர் தேகத்தில் உணவு செல்லும் மார்க்கம்.

வாய் :—வாயில் சிறிது ஜீரணம் நடத்தல், நாக்கு, ருசி, பற்கள், உமிழ் நீர்.

உணவுக்குழாய்—வயறு.

வயற்றின் அமைப்பு. அதில் ஊறும் ஊற்று நீர்கள், உறுப்புக்கள்.

உண்ட உணவு ஜீர்ணமாகின்றது என்பதன் அர்த்தம். எவ்வாறு உணவு இரத்தத்துடன் கலக்கிறது என்பது.

உணவு:—அதன் பல பாகங்கள். கலப்புணவின் அவசியம். தயிர் பால் இவைகளின் மேன்மை.

சுத்த உணவின் அவசியம்.

உணவு உண்ணவேண்டியதற்கு விதிகள்.

நன்றாக மெல்லுதல்—உமிழ் நீருடன் கலந்து நீராதல்.

ஆகாரம் உட்கொள்ளுவதில் சில விதிகள்.

பசித்தபோது சாப்பிடுதல்—சுத்த ஆகாரத்தையே சாப்பிடுதல்— ஈ, எறும்பு, புழுதி படிந்த ஆகாரங்களை சாப்பிடலாகாது.

பழைய ஆகாரம் கூடாது.

சாப்பாட்டுக் கிடையில் எதையும் தின்னலாகாது.

நீர் அருந்துவதற்கு விதிகள்.

கீரையும், காய்கறிகளும், பழங்களும்

பாட்டுகள் :—உணவின் தன்மை.

ஆகார விதிகள்.

ஆரோக்கிய விதிகள்.

# உத்தம ஆசிரியரின் இலக்ஷணங்கள்

By V. C. Kaliappan, *Kathalampattu.*

1. தோற்றம். (தோற்றமில்லாவிட்டாலும் உண்டு பண்ணிக் கொள்ளவேண்டும்.)

2. கோபமின்மை. (சமயோஜிதம் போல் கோபக்குறியை உபயோகித்துப் பிள்ளைகளை அடக்கியாளவேண்டும்.)

3. வகுப்பிலும் பாடத்திலும் சரியான கண்டிப்பு. இவ்விஷயத்தில் கொஞ்சங்கூட தளர்ச்சி கூடாது.

4. எப்போதும் ஒரேவிதமான கண்டிப்பின்றி ஓய்வுநேரங்களிலும், வெளிப்புறங்களிலும், வகுப்பில் பாடமின்றிய மற்ற விஷயங்களிலும் முகமலர்ச்சியுடன் அன்பு காட்டவேண்டும்.

5. உபாத்தியாயர் எப்பொழுதும் தெம்பாகவும், சந்தோஷமாகவும், ஆனந்தகரமாகவும் இருக்கவேண்டும். தமக்கு எக்காரணத்திலாவது வியாகுலமிருந்தபோதிலும் அதைக்குழந்தைகள் முன்பு காட்டிக் கொள்ளாமல் உற்சாகத்தையே வகித்தவராய் விளங்கும் பழக்கமிருக்க வேண்டும்.

6. வகுப்புக்கள் செல்லும்போது முகமலர்ச்சியுடன் செல்லவேண்டும். பிள்ளைகளுடன் பழகும்போது, அன்னவரோடு பேசும் பொழுதெல்லாம் சாந்தமான தொனியோடு பேசி, அவர்களைச் சந்தோஷப் படுத்தவேண்டும்.

7. தக்க விஷய ஞானமுள்ளவரா யிருக்கவேண்டும். எப்போதும் மாணுக்கராய் இருக்கவேண்டும். அதாவது உபத்தியாயரும் படித்துக் கொண்டே இருக்கவேண்டும்.

8. இயல்பில் சுறுசுறுப்புள்ளவராயும், அநுவவில் உற்சாக முள்ளவராயு மிருக்கவேண்டும்.

9. நடையுடை பாவனையில் பிறத்தியாருக்கு ஏளனமாய் இருக்காமல் எப்போதும் ஒரே மாதிரியா யிருக்கவேண்டும்.

10. புது விஷயங்களை அறியவும் ஏற்கனவே படித்தவற்றை நினைவு கூறவும், புதிய ஆராய்ச்சிகளைத் தெரிந்துகொள்ளவும் பத்திரிகைகள், புஸ்தகங்கள் வாசிக்கவேண்டும்.

11. அதிக சத்தமாவது, போதுமான சத்தமின்மை, இவைகளிருக்கக்கூடாது.

12. துர்ப்பழக்கங்களின்றி இருக்கவேண்டும்.

13. பிள்ளைகளுக்கு முன் குற்றமின்றி நடந்துகொள்ளவேண்டும். போதனையாலின்றி நடத்தையால் கற்பிக்கவேண்டும்.

14. எக்காலத்தும் போதிக்கும் போதனைக்கு மாறாக நடக்கக் கூடாது. (ஒன்றைப் போதிக்கும்போது இன்னொன்றைக் கவனித்தல்.

15. ஊரில் பொது மனிதனையும் பரோபகாரியாயு மிருக்க வேண்டும்.

16. ஊர் ஜனங்கள் உன்னைச் சரியாய் அறியாமல் உனக்குப் போதுமான மதிப்புச் செய்யாமலிருக்கும்போது வருத்தப்படக்கூடாது. பொறுமையுடனிருந்து உன் வேலையால் உன்னை அறிந்து கொள்ளும்படி செய்துகொள்.

## நமது கடிதப் பெட்டி

# ஆரம்பாசிரியர்கள் பொது வாழ்வில் ஒதுக்கப்படுவானேன்?

சென்னை மாகாணத்தில் காங்கரஸ் ஆட்சி நடைபெற்ற ஞான்று, ஆசிரியர்கள்மீது விதிக்கப்பட்ட தடை பலருக்கும் திகைப்பையும் வெறுப்பையும் மூட்டியது. பாடசாலை ஆசிரியர்கள் அரசியலில் ஈடு படக் கூடாதென்று சட்டமும் இயற்றப்பட்டது. குறிப்பாக ஸ்தல ஸ்தாபனத் தேர்தல்களில் ஆசிரியர்கள் அபேட்சகர்களாக நிற்பதுமட்டு மின்றி, தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவதும் விரும்பத் தக்கதல்லவென்று சட்டம் விவரித்து வெளிப் போந்ததைப் பலரும் நன்கறிவர். இத்துணை காலம் அவசியமின்றி தேவையற்றிருந்த இக்கொள்கை காங்கரஸ் ஆட்சி யில் அவலம்பிக்கப்பட்டதின் காரணம் ஒரு சிறிதும் விளங்கிற்றில்லை.

ஜனநாயக சர்க்கார் ஆட்சியில், ஆசிரியர்கள் தங்கள் கடமையைச் செய்யவேண்டுவன வெல்லாம், பாடசாலைக் கட்டிடத்தின் உள்ளேயே யன்றி, அன்னாருக்கு வெளியுலகில் வேலையில்லை என்ற கொள்கையென்றே யாம் ஒருவாறு துணிகின்றோம். இக்கொள்கை யிடம் பெறுமா? இருப தாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் இக்கொள்கை முற்போக்கு வாய்ந்ததா? என்று எண்ணிப் பார்க்குங்கால் மிகமிகப் பிற்போக்கான தென்று எவருங் கூறத் துணிவர். பொதுவாக ஏழு லட்சத்திற்கதிக மான கிராமங்களின் பொலிவினாலேயே சிறந்து விளங்கும் இந்தியாவில், இந்திய அரசியல் கலாசார வளர்ச்சிக்குத் துணைசெய்து முன்னேறச் செய்வது கிராமங்களே. நகரங்கள் பெரிதும் வியாபார ஸ்தலங்களாக வும், துக்கமேயறியாத பரம சிரமசீவிகளின் கோட்டைகளாகவும், கிரா மத்தினின்று வெளிப்போந்துவரும் பொருட்டுறைக் கொள்ளைக் கூட்டங் களின் கற்பக் கிரகங்களாகவுமே திகழ்கின்றன. மேலும் அவைகளி னின்று இந்திய சமுதாயத்தின் அரசியல் வளர்ச்சியையோ, பொருளா தார நிலையையோ, நாகரீக உயர்வையோ மதிப்பிட முடியாது.

உதாரணமாக பொது மக்கள் சபையாம் காங்கிரசில் பட்டினங் களிலிருப்போரைவிட கிராமத்தார்களே அதிகம் இருக்கின்றனர். இதைப் புள்ளி விவரங்களே ஐயமற நிரூபிக்கின்றன. உண்மையாய் இந்திய சமுதாயத்துடன் பழகுகிறவர்கள் கிராமவாசிகளேயன்றி நகரத் தாரல்லர். ஒற்றுமை உணர்ச்சியும், குரோத மனப்பான்மையின்மையும் கிராமங்களிலேதான் காணலாம். இத்துணை அமைதியும், சாந்தமும்,

முன்னேற்றமும் கிராமங்களில் மட்டும் பொலியக் காரணமென்ன? கிராமாந்தரங்களிலுள்ள படித்த வகுப்பாரே காரணமென்னலாம்?

சாதாரணமாகக் கிராமங்களில், ஒரு சிறு சம்பவம் நேரிடுங்காலை, கிராமவாசிகள் ஆங்குள்ள ஆசிரியர்களைத்தான் நாடிச் செல்கின்றனர். கல்யாணமோ, கோர்ட்டு விவகாரங்களோ, வைத்திய உதவியோ, ஆலோசனைகளோ, யாவற்றிற்கும், கிராம ஆசிரியர்கள் கிராமவாசிகளுக்கு உதவக் கடமைப்பட்டிருக்கின்றனர். ஆசிரியர்கள் அத்திறப்பட்ட பொறுப்புக்களைத் தட்டிக் கழிக்க இயலாது. இன்றேல் கிராமங்களில் இனிது வாழ வொண்ணுது. நிலைமை இங்ஙன மிருக்கப் பெரும்பாலான கிராமங்களில் பொது மக்களின் மனோபாவமறிந்து ஊடாடிப் பழகுவோர் ஆசிரியர் குருவைத் தவிர்த்து வேறு எவரும் இல்லை யென்று உறுதியாகக் கூறலாம். எனவே ஆசிரியர்கள் கிராம மக்களிடம் ஓரளவு செல்வாக்குடனேயே வாழ்கின்றனர். கிராம யூனியன், முதலிய ஸ்தாபனங்களில் ஆசிரியர் தம் அறிவானுபவத்தைப் பயன்படுத்த ஏதுவும் பெரிது மிருக்கிறது. தென்னுட்டில் பெரிதும் கிராம ஸ்தாபனங்களில், ஆசிரியர் பலர், யூனியன் குமாஸ்தா முதலிய பலதிறப்பட்ட வேலைகளை நிர்வகித்து வருவதே போதிய அத்தாட்சியாகும். இங்ஙனமிருக்க ஆசிரியர்கள் அரசியலில் கலந்துகொள்ளக் கூடாதென்ற தடை யுத்தரவால், தடைப்படுவது கிராம அரசியல் வளர்ச்சியும், அதன் மூலம் இந்திய சமுதாய முன்னேற்றமுமே யன்றி ஆசிரியர்களல்லர். ஆசிரியர்கள் அரசியலில் கலந்து தியாகத்தின் மூலம் பேரும், புகழும், பெருவாழ்வும் பெறுதல் சாத்தியமில்லாமற் போயினும், அதனுல் அன்னுர் பாதிக்கப் படுவதைவிட, அன்னுர் மூலம் கிராமமும், கிராமங்களின் மூலம், ஓர் பெரிய தேசமுமே முன்னேறிச் செல்வது அதிகம் தடைப்படாதா? இம் முறையிற் பார்க்கினும், மேற்கூறப்பட்ட தடையுத்திரவு, விவேகமுடையதாகவோ, அவசியமானதாகவோ காணப்படவில்லை. நிற்க,

செய்யுந் தொழிலெல்லாஞ் சீர்தூக்கிப் பார்க்குங்கால், குறைந்த ஊதியமும், நிரந்தரமான பலனு முள்ளது போதித்தற் றொழிலே. இதில் ஆசிரியர்கள் பதவிகளிலோ எவ்வித உயர்வும் அடைய வழியில்லை. ஊதியமோ தோட்டிகளின் சம்பளத்தினுங் குறைவு. பொறுப்போ மற்றெல்லாவற்றினும் அதிகம். இந்த நிலையில் ஆசிரியர்கள் செல்வாக் கடைய ஏதுவாயிருந்த அரசியற்றுறையையும் மூடிவிட்டால் எத்துணை அழகா யிருக்கும்? இஃதும் ஆசிரியர்கள் தலைவிதிபோலும்! பல்வேறு ஆசிரியர் சங்கங்கள், இவ்வுத்திரவுகள் வெளிப்போந்தது முதல் கண்டனத் தீர்மானங்கள் செய்து வெளி யுலகிற்கும், அரசாங்கத்திற்கும் தெரிவித்ததின் பேரில், அரசாங்கமும், அத் தடையுத்திரவின் அநீதியை யுணர்ந்து, சமீபத்தில் ஓர் அறிக்கை வெளியிட்டதாகப் பத்திரிகைகள் வாயிலாகத் தெரிகிறது. அவ்வறிக்கையில்,

"செகண்டரி பாடசாலைகள், கல்லூரிகள், ஆகியவைகளில் உள்ள ஆசிரியர்கள், அவைகளை நிர்வகிக்கும் மனேஜ்மென்ட்டார் அனுமதி கொடுத்தால், ஸ்தல ஸ்தாபனங்கள், சட்டசபைகள் தேர்தல்களில் அபேட்சர்களாக நிற்கலாமென்றும், தேர்தல் பிரசாதத்திலும் கலந்து கொள்ளலாமென்றும்" சர்க்கார் அனுமதித்திருப்பதாகத் தெரிகிறது. இஃது ஆசிரியர்களுக்கு ஓரளவு வெற்றி மட்டுமின்றி, அவர் தம் உரிமையையும் இன்றைய சர்க்கார் உணர்ந்து அங்கீகரித்ததுமாகும்.

எனினும் ஆசிரியர்கள் இதில் பூர்ணவெற்றி பெற்றுள்ளார்கள் என்று கூறுவதற்கில்லை. ஆரம்ப பாடசாலை ஆசிரியர்கள் மீதுள்ள தடையை நீக்கினபாடில்லை. எனவே ஆசிரியர்கள் மீண்டுங் கிளர்ந்தெழுந்து தம் உரிமையைப்பெற உறுதிகொள்ள வேண்டும். கிராமங்கள் நிறைந்த இந்தியாவில் சிறப்பாக, சென்னை மாகாணத்தில், கிராமங்களிலே தான் ஆரம்பப்பாடசாலைகள் அதிகம். அவற்றுள்ளும் தனி நபர்கள் நிர்வகித்து வரும் பாடசாலைகளே பெரும் பாலானவை. எனவே படித்தவர்கள் கிராமங்களுக்குச் செல்லுங்கள் என்ற கூக்குரலிலும், கிராம சீர்திருத்தத்திற்கு ஆசிரியர்களும் உதவக்கூடும் என்பதிலும் எள்ளளவாவது நம்பிக்கையும், உண்மையு மிருக்குமேயாகில், ஆரம்பபாடசாலை ஆசிரியர்கள் மீதுள்ள தடையையும் அகற்றுவதுதான் போற்றற்குறியது.

அன்பார்ந்த ஆசிரியர்களே!

எழுத்து வாசனையற்ற தொழிலாளர்களும் பிறரும் தங்களுக்கென சங்கங்கள் நிறுவி தங்கள் குறைகளைப் பரிகரிக்க முற்படவில்லையா? அறிவு படைத்த ஆசிரியர்களாகிய நாம் வாளாவிருத்தல் அழகாகுமா? ஆங்காங்கு, தாலூகாதோறும் ஆசிரியர் யூனியன் அமையுங்கள். உங்கள் குறைகளை மேலதிகாரிகளுக்கும், அரசாங்கத்தாருக்கும் எடுத்துக் கூறுங்கள். கோரியபலனை அடையலாம். இஃதொன்றே ஆசிரியர் நிலையை உயர்த்தவல்லது. இனியும் உறக்கம் விட்டொழிமின். உயர்ந்த நோக்கத்துடன் உழைத்தாலல்லது உழைப்பின் பயனை அனுபவிக்க வொண்ணாது. அழுத குழந்தைதானே அமுதருந்தும்?

A. S. K. "சுந்திரமூர்த்தி."

# LIST OF BOOKS.

## தமிழ் பாடப் புத்தகங்கள்.

30-4-40உ
கெஜட்டில் அங்கி
காரமான பக்கம்

### புது முறைத் தமிழ் மணி வாசகம்

| | | | | |
|---|---|---|---|---|
| முதல் வகுப்பு | 0 | 3 | 0 | 129 |
| இரண்டாம் வகுப்பு | 0 | 4 | 0 | ,, |
| மூன்றும் வகுப்பு | 0 | 5 | 0 | ,, |
| நான்காம் வகுப்பு | 0 | 6 | 0 | ,, |
| ஐந்தாம் வகுப்பு | 0 | 9 | 0 | 130 |

### தமிழ் மணி வாசகம்

| | | | | |
|---|---|---|---|---|
| ஆறும் வகுப்பு | 0 | 8 | 0 | 124 |
| ஏழாம் வகுப்பு | 0 | 8 | 0 | ,, |
| எட்டாம் வகுப்பு | 0 | 10 | 0 | ,, |

### இளைஞர் இலக்கண வினு விடை

| | | | | |
|---|---|---|---|---|
| நான்காம் வகுப்பு | 0 | 2 | 0 | 113 |

### புது முறைத் தமிழ் இலக்கணம்

| | | | | |
|---|---|---|---|---|
| ஐந்தாம் வகுப்பு | 0 | 3 | 0 | 123 |

## கணிதம்

### புதிய பாடத் திட்டப் பாலர் கணிதம்

| | | | | |
|---|---|---|---|---|
| 3-ம் வகுப்பு | 0 | 5 | 0 | 91 |
| 4-ம் வகுப்பு | 0 | 8 | 0 | ,, |
| 5-ம் வகுப்பு | 0 | 9 | 0 | ,, |

---

### இயற்கைப் பொருட் பாடமும் தோட்ட வேலையும்

| | | | | |
|---|---|---|---|---|
| 4-ம் வகுப்பு | 0 | 5 | 0 | 101 |
| 5-ம் வகுப்பு | 0 | 6 | 0 | ,, |

## சரித்திரம்

### பாரத நாட்டுச் சரித்திரம்

சுதேச ஜில்லா சம்பந்தமான முக்கிய விஷயங்களுடன் கூடியது. (மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி, திருச்சி, சேலம், கோயம்புத்தூர், தஞ்சாவூர், தென் ஆற்காடு, வட ஆற்காடு, சென்னை, செங்கற்பட்டு) ஒவ்வொரு ஜில்லாவுக்கும் தனித்தனி.

| | | | | |
|---|---|---|---|---|
| 4-ம் வகுப்பு | 0 | 5 | 0 | 63 |
| 7-ம் வகுப்பு | 0 | 10 | 0 | 64 |
| 8-ம் வகுப்பு | 0 | 10 | 0 | ,, |

### உலக விஷய சரித்திரம்

| | | | | |
|---|---|---|---|---|
| 8-ம் வகுப்பு | 0 | 6 | 0 | ,, |

---

## பூகோளம்

### ஜில்லா பூகோள சாஸ்திரம்

மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி, கோயம்புத்தூர், செங்கறபட்டு, வட ஆற்காடு, தனித்தனி

| | | | | |
|---|---|---|---|---|
| 4-ம் எகுப்பு | 0 | 6 | 0 | 74 |

ஷை திருச்சி, சேலம், தென் ஆற்காடு, தனித்தனி

| | | | | |
|---|---|---|---|---|
| 4-ம் வகுப்பு | 0 | 6 | 0 | 75 |

ஷை தஞ்சாவூர்

| | | | | |
|---|---|---|---|---|
| 4-ம் வகுப்பு | 0 | 6 | 0 | 76 |

## சிவிக்ஸ்

### சிவிக்ஸ்

| | | | | |
|---|---|---|---|---|
| நான்காம் வகுப்பு | 0 | 4 | 0 | 63 |
| ஐந்தாம் வகுப்பு | 0 | 6 | 0 | ,, |
| ஆறும் வகுப்பு | 0 | 6 | 0 | ,, |
| ஏழாம் வகுப்பு | 0 | 8 | 0 | ,, |
| எட்டாம் வகுப்பு | 0 | 10 | 0 | ,, |

## அச்சுக் காப்பி புஸ்தகங்கள்

### இங்கிலீஷ் காப்பி புத்தகங்கள்

நிர். 1 முதல் 5. முறையே 4 முதல் 8 வகுப்பு, தனித்தனி 0 1 0

### தமிழ் காப்பி புத்தகங்கள்

நிர். 1 முதல் 5. முறையே 1 முதல் 5வகுப்பு, தனித்தனி 0 1 0

---

## இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்

ஸ்ரீ கோபால் மஹால், மதுரை.

# செய்தித் திரட்டு

## இராசிபுரம் தாலூகா

**சேலம் ஜில்லா இராசிபுரம் தாலூகா திரவியசகாய ஆரம்ப ஆசிரியர்களின் யூனியன் ஸ்தாபிதம் 5-5-40.**

**5-5-40** மாலை ஒருமணிக்கு ஷை யூனியன் மகாசபைக் கூட்டம் தொப்பப்பட்டி கோகுல விலாஸ் எய்டெட் ஹையர் எலிமெண்டரி பாடசாலை ஆசிரிய மானேஜர் ஸ்ரீ K. பெரியசாமி ஐயர் அவர்களின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. மொத்தம் ஆஜரான மெம்பர்கள் 37. கீழ்க்கண்டவர்கள் ஷை யூனியன் நிர்வாகஸ்தர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு வந்தனோபசாரம் கூறி சபை இனிது கலைந்தது.

தலைவர் : ஸ்ரீ K. பெரியசாமி ஐயர், தொப்பப்பட்டி.
உபதலைவர் : ஸ்ரீ A. இராமசாமி ஐயர், இராசிபுரம்.
காரியதரிசி : ஸ்ரீ. M. V. கணபதி, இராசிபுரம்.
உபகாரியதரிசி : ஸ்ரீ நாகரத்தினமய்யர், அலவாய்ப்பட்டி.
பொக்கிஷதார் : ஸ்ரீ N. வெங்கடரமணன், வடுகம்பாளயம்

M. V. கணபதி, காரியதரிசி.

---

**ஜில்லாபோர்டு ஆசிரியர்களின் யூனியன். இராசிபுரம் தாலூகா, சேலம் ஜில்லா, ஸ்தாபிதம் 1—5—40.**

**1—5—40.** மாலை 2 மணிக்கு ஷை யூனியன் மஹாசபைக் கூட்டம் அணைப்பாளையம் பஞ்சாயத்து பாடசாலை உபாத்தியாயர் ஸ்ரீ அஸ்வத்த நாராயணய்யர் தலைமையில் ஆரம்பிக்கப்பட்டது. ஆஜரான மெம்பர்கள் 59. கீழ்க்கண்டவர்கள் நிர்வாகஸ்தர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு வந்தனோபசாரம் கூறி சபை இனிது கலைந்தது.

தலைவர் : K. A. ரெங்கசாமி H. M. புதுப்பாளையம்,
காரியதரிசி : ஸ்ரீ. P. V. வெங்கடசுப்பன், H. M. வெண்ணந்தூர்,
பொக்கிஷதார் : S. ரெங்கசாமி, H. M. நாமகிரிப்பேட்டை.

P. V. வெங்கடசுப்பன், காரியதரிசி.

---

## சிறுகரும்பூர்

**வட ஆற்காடு ஜில்லா அரக்கோணம் ரேஞ்சு, சிறுகரும்பூர் போர்ட் பாடசாலையின் பெற்றோர் சங்க ஆண்டு நிறைவு விழா வெள்ளி விழா கொண்டாட்டங்கள்**

1940ளு ஏப்ரல் மாதம் 28ௌ ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பெற்றோர் சங்க ஆண்டு நிறைவு விழாவுக்கு வாலாஜா ரேஞ்சு (Junior Deputy Inspector) திருவாளர் V. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் தலைமை வகித்தார்கள். வித்துவான் திருவாளர் A. குருநாத முதலியார் அவர்கள் வள்ளுவர் உள்ளம் என்னும் பொருள்

பற்றி அறிய பெரு சொற்பொழிவாற்றினார்கள். பகல் 12 மணிக்கு கூட்டம் முடிந்தபின்னர் வந்திருந்த அனைவருக்கும் உணவு அளிக்கப்பட்டது.

பிற்பகல் 4 மணிக்குப் பாடசாலை வெள்ளி விழா தொடங்கப்பட்டது. சிறுவர்களும் சிறுமிகளும் மேள வாத்தியங்களோடு ஊர்வலம் வந்தார்கள். வட ஆற்காடு ஜில்லா கல்வி அதிகாரி திருவாளர் **V. K,** இராமன்மேனன் **M.A, (Oxon) Bar-at Law** அவர்கள் வெள்ளி விழாவிற்கு அவைத் தலைமை வகித்தார்கள். தலைவருக்கும் கிராமவாசிகளால் ஒரு வரவேற்பு உவந்து வாசித்தளிக்கப்பட்டது. சிறுமிகளால் கும்மி கோலாட்டம் போடப்பட்டது, தலைவர் பேசிய பிறகு வேலூர் மஹந்து உயர்தரக் கலாசாலை தலைமையாசிரியர், திருவாளர் மணி கோட்டீசுவர முதலியார் **B, A, L, T,** அவர்கள் தற்கால உலகமும் கல்வியும் என்ற பொருள்பற்றி அறிய நீண்டதோர் சொற்பொழிவாற்றினார்கள், கிராமவாசிகளால் வெள்ளி விழாவின் நினைவின் பொருட்டுச் செய்து வைத்திருந்த வெள்ளி கேடையம் ஒன்றை தலைவர் அவர்கள் பாடசாலைக்குப் பரிசாக அளித்தார்கள். வந்தனோபசாரம் கூறியபின் கூட்டம் முடிவுற்றது.

அன்று இரவு பள்ளிச் சிறுவர்களால் வள்ளித் திருமணம் என்ற நாடகத்தை இனிது நடாத்தி விழாக்கள் முடிக்கப்பெற்றன.

**K. S. இரத்தினம் பிள்ளை**

*தலைமையாசிரியர், போர்ட் பாடசாலை, சிறுகரும்பூர்.*

---

## நிலக்கோட்டை

### நிலக்கோட்டை சௌராஷ்டிர உயர்தர எலிமேண்டரி ஸ்கூல் வருஷாந்திரப் பரிசளிப்பு விழா

மேற்படி பள்ளிக்கூடத்தின் வருஷாந்தரப் பரிசளிப்பு விழா சென்ற 5—5—40 மாலை 4 மணிக்கு நிலக்கோட்டை ரேஞ்சு வீனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் ம-ா-ா-ஸ்ரீ **K. C.** குப்புசாமி அய்யர் அவர்கள் தலைமையில் நடந்தேறியது. மேற்படி விழாவிற்கு உள்ளூர் உத்தியோகஸ்தர்களும், முக்கியமான சில பிரமுகர்களும் விஜயம் செய்தார்கள். மேற்படி பாடசாலையின் காரியதரிசியும் கரஸ்பாண்டண்டுமான ஸ்ரீ **S. R.** அநந்தய்யர் அவர்களால் பந்தய விளையாட்டுக்களில் ஜெயித்த மேற்படி ஸ்கூல் மாணவ மாணவிகளுக்கு ஏராளமானதும் விலையுயர்ந்ததுமான பரிசுகள் வழங்கப்பட்டன.

மதுரை மாஜி சேர்மனாகிய ஸ்ரீ **L. K.** துளசிராமன் அவர்கள் கல்வியைப்பற்றிப் பேசுகையில் தற்கால நிலைமைக்குத் தக்கவாறு தொழிற் கல்விதான் மிகவும் இன்றியமையாதது என்பதை வற்புறுத்திக் காட்டியதுடன் மேற்படி ஸ்கூலில் நடந்தேறிய கும்மி, கோலாட்டம், சங்கீதம், ஸ்கௌட், கப் விளையாட்டுக்களிலிருந்து மேற்படி ஸ்கூல் ஹெட்மாஸ்டர் **R.** இராமசாமி ஐய்யங்கார் அவர்களின் திறமையை எடுத்துக் காட்டினார்.

தலைவர் தம் முடிவுரையில் தற்கால உலக நிலைக்குத் தக்கவாறு பாடசாலைகளில் கைத்தொழில், கல்வி, சங்கீதம், விஞ்ஞானம் எவ்வாறு அவசியமானவை என்பதைக் கூறினார். **V. R. S. Mani.**

# பத்திராதிபர் குறிப்புகள்

**கல்வி மகாநாடு**

மேமாதம் கடைசி வாரத்தில் தென்னிந்திய மாகாணக் கல்வி மகாநாடு அம்பாசமுத்திரத்தில் கூடியது. திருவாளர் டாக்டர் இலக்ஷ்மண சுவாமி முதலியார் அவர்கள் தலைமை வகித்தனர். அவருடைய பிரசங்கத்தின் முக்கிய பாகத்தை இந்த இதழில் வேறிடத்தில் நேயர்கள் காணலாம். ஆசிரியர்களுக்கு உயிர் நிலைக்கு அவசியமான ஊதியத்தை அளித்தல் வேண்டுமென்றும் ஸ்தலஸ்தாபனங்களும் தனி மானேஜர்களும் ஆசியர்களுடைய சௌகரியத்தைக் கவனித்தல் அவசியமென்றும் ஐயமற வற்புறுத்திருக்கிறார். வேலை நிறுத்தம் முதலிய விதிக்கு மாறான முறைகளை ஆசிரியர்கள் கையாளுவது சரியல்லவென்றும் அவர் கூறியுள்ளனர். முடிவுரையில் ஆரம்ப ஆசிரியர்களின் கஷ்டத்தைத் தாம் தெரிந்துகொண்டதாகவும் அதை நீக்குவதற்குத் தம்மாலான உதவியைச் செய்யத்தயாராயிருப்பதாகவும் அவர் கூறியதை நாம் பாராட்டுகிறோம்.

மகாநாடு கூடுவதற்கு முன்பே ஆரம்ப ஆசிரியர்களிடம் மனக்கொதிப்பும் கவலையும் இருப்பது வெளியாயிற்று. இரண்டுதடவை பொதுக் கூட்டம்கூடி மகாநாட்டுப் பிரதிநிதிகள் அதிகாரிகள் முதலியோர் முன்னே அவர்கள் தம் கஷ்டங்களை வெளியிட்டார்கள். தென்னிந்திய ஆசிரியர் சங்கத்தால் அவற்றை விதிமுறையில் நீக்கவழியுண்டாவென்றும் வெளிப்படையாகக் கேட்டனர். இனிப்படமுடியாது இத்துயரமென்பது அவர் கொள்கை. அச்சமயம் அங்கு கல்வி இலாகாத் தலைவர் கனம் ஸ்டேதம் அவர்களும் மற்றைய ஜில்லாக் கல்வி அதிகாரிகளுமிருந்திருப்பின் ஆரம்ப ஆசிரியர்களிடம் தோன்றியுள்ள மனக்கொதிப்பின் அளவை அவர்கள் அறியமுடியும். ஆசிரியர்களின் கஷ்டங்களும்கூட நீங்கிவிடலாம். ஆசிரியர்கள் நிலைமை இப்படியே தாழ்ந்திருக்குமானல் கல்வி முன்னேற்றமடைவது கனவே. யுத்தத்திற்கு வேண்டிய ஆயுதங்களையும்படைகளையும் காலத்தில் தயார்செய்யாவிடில் மந்திரிகள் குற்றம் செய்ததாக ஜனங்கள் கருதுவதுபோல் ஆரம்பக் கல்வி விஷயத்திலும் வேண்டிய சாதனங்களையும் சௌகரியங்களையும் முன்பாகவோ அல்லது எடுத்துக்காட்டிய பின்போ தயார் செய்யாவிடில் அதிகாரிகளைப் பொது ஜனங்கள் குறை கூறுதல் தவருகாது.

ஆசிரியர்கள் கூறினதின் பேரில் அவர்களுடைய கஷ்டங்களை அதிகாரிகள் மூலமாக சீக்கிரத்தில் நீக்க சில தீர்மானங்கள் மகாநாட்டில் அங்கீகரிக்கப்பட்டன. தீர்மானங்கள் விவாதத்திற்கு வந்த சமயத்தில் ஆரம்ப ஆசிரியர்கள் தம் அபிப்பிராயத்தைத் தெளிவாகவும் பொறுப்புடனும் தெரிவித்தார்கள். தலைவர் அவர்களும் தம் முடிவுரையில் இதைப் பற்றிப் பெருமையாகக் கூறினர்கள். இத்தகைய ஆசிரியர்களிடம் உத்ஸாக மேற்படின் கல்வி முன்னேற்ற மடைவது நிச்சய

மல்லவா ? ஆகவே அதிகாரிகள் வழக்கம்போல் அசட்டை செய்யாது கீழே கண்ட தீர்மானங்களைக் கவனித்துத் தகுந்த முறைகளைக் கையாளுவார்களென நாம் எதிர்பார்க்கிறோம். மகாநாட்டில் ஆரம்பக்கல்வி சம்பந்தமாக நிறைவேறிய முக்கிய தீர்மானங்களாவன :—

1. ஸர்வீஸ் ரெஜிஸ்டர் ஆசிரியரை வேலையினின்று விலக்குவதைத் தடுக்கமாட்டாதென்பதும், குறிப்பிட்ட காரணங்களுக்கே வேலையினின்று நீக்கும்படியாக ஸர்வீஸ் ரெஜிஸ்டர் விதியை மாற்றவேண்டுமென்பதும் மகாநாட்டின் அபிப்பிராயம்.

2. பிள்ளைகளுக்கும் ஆசிரியர்களுக்கும் சிரமம் ஏற்படுவதால் ஒரு நாளைக்கு ஐந்துமணி வீதம் வருஷத்திற்கு 220 நாட்கள் பள்ளிக்கூடம் வேலை செய்யவேண்டுமென்னும் கொள்கையை மகாநாடு எதிர்க்கிறது.

3. ஆரம்பக்கல்வி சம்பந்தமாகத் தற்காலம் அமுலிலிருந்துவரும் சர்க்கார் பாலிஸியையும், அவர்கள் வெளியிட்டுள்ள உத்திரவுகள் விதிகள் முதலியவற்றையும், விசாரித்துப் பரிசீலனை செய்தல் அவசியம்.

4. ஆசிரியர்களுக்கும் மானேஜர்களுக்கும் உறுதி செய்யும் வகையில் கிராண்டு சம்பந்தமான விதிகளைத் தெளிவாக்குவதுடன் அவற்றை சரியான வழியில் மாற்றவும் வேண்டும்.

5. மலையாளம் ஜில்லாவில் ஏற்பட்ட குழப்பம் ஆரம்ப ஆசிரியர்களிடத்தே கொதிப்பு ஏற்படக்கூடுமென்பதைக் காட்டுவதால், அவர்களின் ஸர்வீஸ் விதிகளை ஒழுங்கு செய்து சம்பளத் திட்டத்தை நிர்ணயிப்பதும் அவ்விதிகளை அமுலுக்குக் கொண்டுவருவதும் அவசியம்.

6. உயர்தரப் பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்களுக்கு ஸ்தல ஸ்தாபனங்களுக்கும் சட்டசபைக்கும் அபேக்ஷகராக நிற்கும் பழைய உரிமையைக் கொடுத்ததுபோல் ஆரம்ப ஆசிரியர்களுக்கும் பழைய உரிமையை அளிக்கும்படி உத்திரவை மாற்றுதல் சரியாகும்.

எல்லாத் தீர்மானங்களையும் ஆரம்ப ஆசிரியர்கள் கவனித்துப் படிப்பின் அவர்களுக்குத் தென்னிந்திய ஆசிரியர் சங்கத்தினிடம் நம்பிக்கை குறைவுபடாதென்று நிச்சயமாய் நம்பலாம். தீர்மானங்கள் நிறைவேறியதும் நமது கஷ்டங்கள் நீங்கிவிட மாட்டா. தென்னிந்திய ஆசிரிய சங்கத்து அதிகாரிகள் சீக்கிரத்தில் சர்க்காருக்கு மேற்கூறிய தீர்மானங்களை விளக்கும்பொருட்டு குறிப்பொன்று தயார் செய்து அனுப்பப் போவதாக நாமறிகிறோம். ஆரம்ப ஆசிரியர்கள் தகுந்த விவரங்களைத் தெளிவாக உடனே யூனியன் காரியதரிசிக்கு அனுப்பினால், சர்க்காருக்கு எல்லாக் குறைகளையும் தெரிவிக்க முடியும். மகாநாடு கூடும்போது வருத்தத்தை வெளியிட்டுப் பின்பு சும்மாவிருத்தல் சரியான வழியாகாது. நம்மெண்ணம் நிறைவேற வேண்டின் ஓயாது உண்மையான விவரங்களை யூனியன் காரியதரிசிக்கு அப்போதைக்கப்போது தெரிவிப்பதுடன் “பாலர் கல்வி”யில் சொற்குற்றம் பொருட்குற்றமின்றியும்

மிகைப்படுத்தாமலும் விஷயத்தை வெளியிடுதல் தகுந்த உபாயமாகும். பொதுஜனங்களும் அதிகாரிகளும் ஆசிரியர்களுடைய நிலையை அறியும்படிச் செய்வது ஆசிரியர்களின் முக்கிய நோக்கமா யிருத்தல்வேண்டுமென்பதை மறுபடியும் வற்புறுத்துகிறோம்.

**வேனிற்காலப்பயிற்சி**

அம்பா சமுத்திரத்தில் கல்விமகாநாட்டினையொட்டி வரவேற்புக் கமிட்டியின் ஆதரவில் ஆரம்ப ஆசிரியர்களின் முன்னேற்றத்தின் பொருட்டு வேனிற்காலப்பயிற்சி இரண்டு வாரங்களுக்குமேல் அளிக்கப் பட்டது. சுமார் மூன்நூறு ஆசிரியர்கள் பயிற்சிபெற்றனர். இவர்களுள் சுமார் எண்பதுபேர் பெண்கள் பாடசாலைகளிலுள்ள உபாத்தினிமார்கள். காலையிலிருந்து மாலைவரை போட்டதிட்டப்படி பல பாடங்களிலும் போதனை முறைகளிலும் பயிற்சி அளிக்கப்பட்டதாக நாம் அறிகிறோம். பயிற்சி பெறும் ஆசிரியர்களின் சௌகரியத்திற்காக இக்கமிட்டியார் பிரசுரம் செய்துள்ள புத்தகத்தில் எல்லா விவரங்களும் குறிப்புகளும் அடங்கியுள்ளன. இப்புத்தகத்தை வேறு ஜில்லாக்களிலுள்ள ஆசிரியர்களும் வாங்கிப்படிப்பார்களென்று நாம் நம்புகிறோம். இந்த வேனிற்காலப் பயிற்சியால் வரவேற்புக்கமிட்டியாருக்கும் திருநெல்வேலி ஜில்லா ஆசிரிய சங்கத்திற்கும் சிரமம் ஏற்பட்டிருக்குமென்பது சொல்லாமலே விளங்கும். பணமில்லாத சமயத்தில் ஊர்விட்டு ஊர்வந்து படிச்செலவு சொந்தத்தில் செய்து, பயிற்சியிற் சேர்ந்துள்ள ஆசிரியர்களும் கஷ்டப்பட்டிருப்பார்களென்று நிச்சயமாய்க் கூறலாம். வரவேற்புக் கமிட்டியார் பயிற்சி விஷயமாகப் பணம் செலவிட்டது மிகவும் மெச்சத்தக்கது. இப்பயிற்சியால் ஆரம்பக்கல்விக்கே இலாபமென்று சொல்வதுமிகையாகாது. இவ்வித முயற்சிக்காக வரவேற்புக் கமிட்டியாருக்கு ஆசிரியர்கள் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளார்கள். வேனிற்காலப்பயிற்சியால் பயனுண்டென்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஜில்லா ஆசிரியர்சங்கங்கள் ஒன்றன் பின்னொன்றாக வேண்டிய ஏற்பாடுகள் செய்யத்தயாராயிருப்பது யாவருமறிந்ததே. ஜில்லாக்கல்வி இலாகா அதிகாரிகளும் ஆசிரிய சங்கங்களுடன் ஒத்துழைக்கிறார்கள். இந்த ஒத்துழைப்பிற்காக ஆசிரியர் சங்கம் நன்றிபாராட்டுகிறது. கல்வி இலாகாத் தலைவருக்கு இச்சமயம் ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறோம். பயிற்சி பொதுக்காரியமானதாலும், கல்வியின் முன்னேற்றத்திற்கு அவசியமா யிருப்பதாலும், இதற்கு சர்க்கார்பொருளுதவி செய்வது நியாயமேயாகும். ஆரம்ப ஆசிரியர்களை இக்காலத்தில் கைப்பணத்தைச் செலவழித்து பயிற்சி பெற அழைக்க நாவு கூசுகிறது. பயிற்சியின் அவசியத்தை சர்க்கார் தமது அறிக்கைகளில் தெளிவாகக் காட்டியிருக்கிறார்கள். ஆகவே இனிமேல் இப்பயிற்சிக்குப் பொருளுதவியை சர்க்காரிடமிருந்து பெறுவதற்கு வேண்டிய உதவியைச் செய்யுமாறு கல்வி இலாகத்தலைவரைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.